விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Dishtv
பழைய Dishtv ரிஸீவர்க்கு பதிலாக புதிய ரிஸீவர் 700/= மட்டுமே
dishtv
(C-5208)
SATS-TECH
Phone: 021 222 8812, Mob: 076 886 1160

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 10 வியாழக்கிழமை (24.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 036

## நீராவியடிப் பிள்ளையார் கோவிலடி வளாகத்தில் புத்தர்சிலை திறப்பு

### தொல்லியல் திணைக்களம் உதவியதோடு பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கினர்



(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு நாயாறு நீராவிய டிப் பிள்ளையார் ஆலயத்தை அபக ரித்து அமைக்கப்பட்டு வந்த புத்தர் சிலை பொலிஸார் மற்றும் 23☛

## முல்லைத்தீவில் புத்தர் சிலை திறப்பு
## கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அலரி மாளிகையில் விருந்து

(கொழும்பு)
முல்லைத்தீவில் நேற்று புத்தர் சிலை திறந்து வைக்கப்பட்ட அதே வேளை தமிழ்த் தேசிய கூட்டமை ப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு நேற்று இரவு அலரி மாளி கையில் விசேட விருந்துபசாரம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வின் விசேட அழைப்பில், நேற்று இரவு விருந்து இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்கள், பிரதமர் ரணில் விக் கிரமசிங்க, அமைச்சர்கள் இந்த இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர். கூட்டமை 23☛

## பிரிக்க முடியாத நாட்டினுள்
# தீர்வொன்றையே எதிர்பார்க்கின்றோம்
### பிரித்தானிய அதிகாரியிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

(கொழும்பு) ஒருமித்த, பிரி படாத, பிரிக்க முடியாத நாட்டுக் குள்ளேயே தீர்வு ஒன்றினை எதிர் பார்க்கின்றோம் என பிரித்தானிய அதிகாரியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துரைத்து ள்ளது. (23-ம் பக்கம்...)



## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்ய இணங்குகிறேன் - மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)
நிறைவேற்று அதிகார ஜனாதி பதி முறையை ரத்து செய்வதற்கு தாம் இணங்குவதாக முன்னாள் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலை வருமான மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

அரசியல் அமைப்பு வரைபுத் திட்டம் தொடர்பில் விசேட அறிக் கையொன்றை நேற்றைய தினம் வெளியிட்டதன் மூலம் அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார். 23☛

## தமிழர்களை கையேந்தும் நிலையில் வைத்திருப்பது அரசின் விருப்பமா? - சிறீதரன் கேள்வி

(கொழும்பு)
தமிழர்களை தொடர்ந்தும் கையேந்தும் நிலையில் வைத்திரு ப்பது தான் இந்த அரசாங்கத்தின் விருப்பமா என தமிழ்த் தேசிய கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் சிறீதரன் கேள்வி எழுப்பியு ள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கடன் இணக்க திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் 23☛

### ஜனாதிபதி மைத்திரி
## சிங்கப்பூர் பயணம்

(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன உத்தியோகபூர்வ விஜயமொ ன்றை மேற்கொண்டு சிங்கப்பூரு க்கு பயணமாகியுள்ளார்.

ஐந்து நாட்கள் விஜயத்தினை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, நேற்று புதன்கிழமை 24☛

## மக்களிடம் அதிகாரம் செல்வதை அரசியல்வாதிகள் விரும்பவில்லை
### பிரித்தானியாவின் தெற்காசியாவிற்கான பொறுப்பதிகாரியிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

(கொழும்பு)
மக்களிடம் அதிகாரம் செல்வதை அரசியல்வாதிகள் விரும்பவில்லை என பிரித்தானியாவின் தெற்காசி யாவிற்கான பொறுப்பதிகாரியிடம் சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தனுடன், பிரித்தானியாவின் தெற்காசியாவிற் கான பொறுப்பதிகாரியான பர்கஸ் ஒல்ட் சந்தித்துக் கலந்துரையாடியு ள்ளார்.

கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் நேற்று புதன்கிழமை 24☛

## வடக்கு ஆளுநர் சுரேன் ராகவனை சந்தித்த பிரித்தானிய தூதுவர் குழு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக் கான பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ் டொரிஸ் தலைமையிலான குழுவி னர் வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவனைச் சந்தித்துக் கலந்துரை யாடியுள்ளனர். இந்தச் சந்திப்பு யாழ்.கைதடியிலுள்ள 23☛

## வடக்கு மக்களின் பிரச்சினையை உடன் தீர்க்க ஆளுநர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
வடக்கு மக்களின் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்ய வட மாகாண ஆளுநர் சுரேன் ராக வன் நடவடிக்கைகளை மேற்கொ ண்டுள்ளார்.

அனைத்துத்துறை அமைச்சுக் களின் அதிகாரிகளுடன் இணை ந்து, மக்கள் பிரச்சினைகளில் நேர டியாக தலையிட்டே அவர், உடனடி தீர்வுகளை எட்டுவதற்கான நடவடி க்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கைதடியில் புதன்கிழமைகளில் இடம்பெறும் மக்கள் சந்திப்புக்க ளின் போதே குறித்த நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி நேற்றும் புதன்கிழமை மக் கள் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, தனிப்பட்ட வகை யில் அவரது அலுவலக 24☛

## அரசியலமைப்பு நிறைவேறாது!
### பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம

(கொழும்பு)
பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவுள்ள புதிய அரசியலமை ப்பு யோசனை ஒருபோதும் நிறை வேறப்போவதில்லை என்று ஐக் கிய மக்கள் சுதந்திர கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கூறியுள்ளார்.

களுத்துறை பிரதேசத் 24☛

## கூட்டமைப்பு கடமையை நிறைவேற்றியிருந்தால்
### தெற்கு செவிசாய்த்திருக்கும் என்கிறார் நாமல் ராஜபக்ஷ



(கொழும்பு)
தமிழ்க் கூட்டமைப்பு எதிர்க் கட்சியின் கடமையை சரியாக நிறைவேற்றியிருந்தால் இன்று அவர்களின் கோரிக்கைக 23☛

# 2 மோட்டார் சைக்கிளை மோதிவிட்டு வேகமாக பயணித்த சொகுசு கார்



(கோப்பாய்)

கோண்டாவில் சந்திப் பகுதியில் வேகமாக பயணித்த கார் இரண்டு மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

நேற்று மாலை 6.15 மணியளவில் சொகுசு காரில் பயணித்த இளைஞர் காரினை வேகமாக செலுத்தி கோண்டாவில் சந்தியில் வீதியில் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளிவிட்டு நிற்காது தப்பித்துள்ளார்.

இதனை அவதானித்த அப்பகுதி இளைஞர்கள் குறித்த காரினை துரத்திச் சென்றுள்ளனர். இதன்போது மேலும் வேகமாக காரினை செலுத்திய போது மேலும் ஒரு மோட்டார் சைக்கிளை மோதிய போது காரின் முன் பக்க ஒரு சில்லின் ரயர் வெடித்துள்ளது.

இதனால் காரினை மேற்கொண்டு செலுத்த முடியாதமையினால் பலாலி வீதியில் துரத்திச் சென்றவர்களிடம் சிக்கியுள்ளது.

காரில் பயணித்த இளைஞருக்கும் பாதிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்காரர்களுக்கும் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்ற போது.

காரில் பயணித்த இளைஞர் தம்மை மன்னிக்கும் படியும் தாம் புதுப்பழக்கம் தவறுதலாக மோதிவிட்டேன் நின்றால் அடித்து விடுவீர்கள் என்ற பயத்தினால் தான் ஓடியதாகவும் பாதிக்கப்பட்ட மோட்டார் வண்டிகளுக் குரிய இழப்பீட்டை தான் தருவதாகவும் தெரிவித்தார்.

குறித்த சம்பவத்தின் போது ஒருவருக்கு காலில் சிறுகாயம் ஏற்பட்டுள்ளது. குறித்த சொகுசு கார் ஒரு பக்கம் அதிகளவில் சேதமடைந்திருந்தது. காரினால் பாதிக்கப்பட்ட தரப்பினரும் கார் செலுத்திய இளைஞரும் சமரசமாக சென்றிருந்தனர். (ம-87)


## விற்பனைக்கு


ஊர்க்கோழிக் குஞ்சுகள்
கிரிறாஜ் இன ஒரு நாள் குஞ்சுகள்
விற்பனைக்குண்டு.
விலை : 75/=
முற்பதிவுகளுக்கு : 077 853 6886, 077 068 3786
(7249)



## லக்சுமி கென்ரக்சன்ஸ்

புதிய வீடுகள், கடைகள் நிர்மாணிப்பதற்கும் பழைய வீடுகள் புதிய வடிவில் நிர்மாணிப்பதற்கும் சட்டறிங் செய்து பிளேட் போடுவதற்கும் உரிய காலத்தில் தரமாக செய்து கொள்ள நாடுங்கள்.
076 428 0010,
076 171 1231 நீர்வேலி தெற்கு.
(C-5285)


# மரண அறிவித்தல்



## நடராஜா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - ஐக்கிய வியாபாரச் சங்கம் யாழ்ப்பாணம்.)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கரம்பொன் ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.01.2019 காலை கரம்பொனில் இடம் பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(க)

# நாமல் ராஜபக்ஷவிடம் சி.ஐ.டி. விசாரணை

(கொழும்பு)

வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று குற்றத் தடுப்பு விசாரணை பிரிவில் ஆஜராகியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான கொலை சதித்திட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இந்திய பிரஜை வெளியிட்ட தகவலுக்கு அமையவே நாமல் ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இந் நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் விமல் வீரவன்ச ஆகியோரிடமும் கொலை சதி திட்டம் தொடர்பில் வாக்குமூலம் பெறப்பட்டதாக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி அன்பரசி அருட்செல்வன்
{(JP,MA (Distinction), (M.Phil)}
யாழ் பல்கலைக்கழகத்தில் 22.01.2019 செவ்வாய்க்கிழமையன்று இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுதத்துவமாணி (M.Phil. In History)பட்டம் பெற்ற திருமதி அன்பரசி அருட்செல்வன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல பட்டங்கள் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர் :
உறவினர்கள்
(C-5276)



## எழுதுவினைஞர் தேவை

யாழ் மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தினருக்கு எழுதுவினைஞர் ஒருவர் (ஆண்) தேவை. வயது எல்லை 20 – 40 வரை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

05.02.2019 ற்கு முன் காலை 9.30 - 4.00 மணிவரை நேரில் வரவும்.

021 320 5722
077 929 5905
இல. 40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.
(7252)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் அனைத்து பின்வரும் விபரப்படியான கிளைக்குழுக்களினை தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டம் 26.01.2019 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் விபரப்படியான இடங்களில் நடைபெறும்.

**26.01.2019ஆம் திகதி நடைபெறும் கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**

| தொ. இல | தவிசாளர் பெயர் | கிளைபெயர் | கிளை இல | கிளை பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | சுந்தரலிங்கம் அகிலன் | தோப்புக்காடு | 1 | தோப்புக்காடு கிராம அபிவிருத்திசங்க பொது நோக்கு மண்டபம் |
| 2 | கந்தசாமி சசிகரன் | விளானை | 2 | விளானை சனசமூக நிலையம் |
| 3 | பாக்கியராசா குருபரன் | களபூமி | 3 | களபூமி J/42 கிராம சேவையாளர் அலுவலகம் |
| 4 | நாகமுத்து ஜெயவதனன் | கணேசன் | 4 | சிவகௌரிகடற்தொழிலாளர்கூட்டுறவுசங்க கட்டிடம் |
| 5 | இராசையா உதயகுமார் | காரைநகர் | 5 | சங்க தலைமைக்கட்டிடம் |
| 6 | இரத்தினசிங்கம் கஜேந்திரன் | ஆலடி | 6 | காரை மத்தி மேம்பாட்டுக்கழகம் |
| 7 | கணேசராசா பரநிரூபன் | சிவகாமி | 7 | கிளை 07 சிவகாமி கிளை கட்டிடம் |
| 8 | சற்குணசிங்கம் பிறேமிலன் | கோவளம் | 8 | கோவளம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடம் |
| 9 | இராஜசிவம் தனுசன் | வியாவில் | 9 | வியாவில் சனசமூக நிலையம் |
| 10 | ஜெயபாலன் சதீஸ் | ஊரி | 10 | அன்ரசன் மண்டபம் – ஆடியஸ் ஊரி |
| 11 | தங்கராசா கண்ணதாசன் | பாலாவோடை | 11 | பாலவோடை சங்க கிளைக்கட்டிடம் |
| 12 | பாலச்சந்திரன் பாலரவி | வாரிவளவு | 12 | முன்னாள் சுகாதார தொண்டர் பணிமனை கட்டிடம் |
| 13 | மயில்வாகனம் கபிலன் | நீலிப்பந்தனை | 13 | வெற்றிநாதன் அரங்கு SM கேணியடி |

கூட்டத்தில் பங்குபற்ற தகுதியான உறுப்பினர்களுக்கான அழைப்புக்கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முகவரி மாற்றம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ கிளை பொதுச்சபை கூட்டத்திற்கான அழைப்பு கடிதங்கள் கிடைக்காத வாக்களிக்க தகுதியான அங்கத்தவர்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக கருதி தமக்குரித்தான கிளை பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறித்த நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ஒப்பம் : செல்வி பரீன் ஹஸ்ஸான அப்துல் சமீயூ
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
(C-5277)


## காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 172ஆவது இசை ஆராதனை விழா



# அழைப்பு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்
காலம் : 25.01.2019 வெள்ளிக்கிழமை பி.ப. 5.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

- ஈழத்துப் பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வழங்கும் "மங்கள இசை"
- ஈழத்து பிரபல கர்நாடக இசைக்கலைஞர்கள், வாத்தியக் கலைஞர்கள் வழங்கும் "இசை ஆராதனை"

குறிப்பு : * நிகழ்வுக்கான இலவச போக்குவரத்துச் சேவை கலா மன்ற யாழ் கிளையில் இருந்து பி.ப. 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.
(இல. 428, K.K.S வீதி, வண்ணை சிவன் கோவில் அருகாமை யாழ்ப்பாணம்.)
* மங்கள இசை, இசை ஆராதனையில் பங்குகொள்ள ஆர்வமும் விருப்பமும் உள்ள கலைஞர்கள் இணைந்துகொள்ளலாம்.
* குறித்த நேரத்திற்கு நிகழ்வுகள் ஆரம்பமாவதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம் காரைநகர். (C-5284)

# யாழ்ப்பாண மக்களின் நீர்த்தேவையைப் பூர்த்திசெய்ய வடக்கில் வீண்விரயமாகும் நன்னீரை சேமித்து நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் ராகவன் உறுதி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி விவசாயிகளுக்கு உரித்தான இரணைமடுக் குளநீரை அவர்களே பயன்படுத்தும் முதல் உரிமை உடையவர்கள் எனத் தெரிவித்த வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், யாழ்ப்பாண மக்களின் நீர்த் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்காக வடக்கில் வீண்விரயமாக்கப்படும் நன்னீரை சேமித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.





கைதடியிலுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கிளிநொச்சி விவசாயிகள் வடக்கு ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடலின் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,இரணைமடுக் குளத்தில் உள்ள தண்ணீர் கிளிநொச்சி மக்களுக்கு உரியதாகும்.

அக் குளத்தின் தண்ணீரை அம்மக்கள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இருப்பினும் யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களுக்கும் தண்ணீர்த் தேவை உள்ளது என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்

தண்ணீருக்கு உரித்துடையவர்கள் அந்தத் தண்ணீரை வீண்விரயமாக்காமல் பயன்படுத்திவிட்டு, வேறு மாவட்டங்களில் தண்ணீர்த் தேவை உடையவர்களுக்கு பகிர்ந்து வழங்க வேண்டும் என்பதே சர்வதேச நீதியாகும்.

இதே வேளை வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் எங்கு நீர் உள்ளது. அதனை எவ்வாறு சேமித்து மக்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பில் ஆராய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இக்குழுவில் விவசாய சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 3 பெண்கள் உட்பட 5 பேர் மாவட்டங்களின் அடிப்படையில் உள்ளடக்கப்படுவார்கள். அந்த வகையில் கிளிநொச்சி விவசாயிகளுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் இவ்வருட சிறுபோகச் செய்கைக்காக இரணைமடுக் குளத்தில் உள்ள நீரை விவசாயிகளுக்குப் பகிர்ந்து வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாண மக்களின் நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக வடக்கில் வீண் விரயமாக்கப்பட்டு கடலுடன் கலக்கும் நன்னீரை எவ்வாறு சேமித்து மக்களுக்கு வழங்க முடியும் என்பது தொடர்பில் ஆராய்ந்து எதிர்காலத்தில் நீர் தேவைகளை முழுமையாக நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். கிளிநொச்சியில் உள்ள விவசாயிகள் தமது பிரச்சினைகளோ அல்லது. நீர் முகாமைத்துவம் தொடர்பான கருத்துக்களையோ அக்குழுவிடம் முன்வைக்க முடியும்.

வடக்கு மக்களின் தேவைகளை முழுமையாக தீர்த்துக் கொள்வதற்கான நீர் வளம் இங்கு உண்டு. அந்த நீரைப் பகிர்ந்து மக்களுக்கு வழங்குவதிலேயே பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. ஒரு மாவட்டத்தில் தண்ணீர் அதிகமாக உள்ளது. மற்றுமொரு மாவட்டத்தில் தண்ணீர் குறைவாக உள்ளது. இதனால் தான் நீர்ப் பிரச்சினை மேலெழுகின்றது.

இதனால் பேச்சுவார்த்தை ஊடாக எதிர்வரும் 20 ஆண்டுகளுக்கு வடமாகாணத்தின் முகாமைத்துப்படுத்தப்படும் திட்டம் ஒன்று முன்மொழியப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் தண்ணீர்ப் பிரச்சினை தொடர்பான பிரகடனம் உருவாக்கப்பட வேண்டும் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# படைப்புழுவின் ஆக்கிரமிப்பிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கப் பேரணி

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சோளப் பயிர்களில் படைப்புழுவின் ஆக்கிரமிப்பானது மிகவும் பாரதூரமானதொன்றாக காணப்படுகின்றது.

இப் படைப்புழுவின் தாக்கம் தற்போது யாழ். மாவட்டத்திலும் அவதானிக்கப்பட்டுள்ளது. இப் பீடை சோளம், நெல், மரக்கறிப் பயிர் பயிர்கள் உட்பட 100 இற்கு மேற்பட்ட பயிர்களிலும் தாக்ககத்தை ஏற்படுத்தக் கூடிய அபாயத்தை கொண்டுள்ளது. அதனைக் கருத்திற்கொண்டு ஆரம்பத்திலேயே முகாமைத்துவம் செய்வதற்கு விவசாயிகள், பொது மக்கள் மற்றும் கால் நடைப் பண்ணையாளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில நடைபவனி பேரணி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பேரணி இன்று 24 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு காங்கேசன்துறை வீதியில் உடுவில் பிரதேச சபை தலைமை காரியாலயத்திற்கு முன்பாக ஆரம்பித்து மருதனார்மடம் சந்தையை நோக்கியதாக அமையவுள்ளது என பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# இராணுவ அதிகாரிகளை பாதுகாக்க அரசாங்கம் தலையிட வேண்டும்

## கமால் குணரட்ன கோரிக்கை



(கொழும்பு)

நாட்டுக்காக செயற்பட்ட இராணுவ அதிகாரிகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும் என ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றத்தால் குற்றவாளியாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

லண்டனில் புலம்பெயர் தமிழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது, அவர்களுக்கு அச்சுறுத்தலுடன் சைகை செய்தமைக்காக பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் கார்டியன் உள்ளிட்ட இணையத்தளங்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் சார்பில் வழக்கைத் தாக்கல் செய்த அரச சார்பற்ற அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இலங்கை சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது, லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்னால் இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தின்போது அவர் இவ்வாறான நடத்தையை வெளிப்படுத்தியிருந்தார்.

இந் நிலையில், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக பிரித்தானியாவின் சட்டம் மற்றும் சமாதானத்தைப் பாதுகாக்கும் சட்டத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த பிரிகேடியருக்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் ஊடாக அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதாக அந்த அரச சார்பற்ற அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

எனினும், பிரிகேடியர் பிரியங்க ப்எர்னாண்டோவுக்கு அவ்வாறானதொரு அறிவித்தல் வழங்கப்படவில்லை என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ கடமையில் ஈடுபட்டுள்ள அவரை, ஒருபோதும் பிரித்தானியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்த தாம் எதிர்பார்க்கவில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். இந் நிலையிலேயே கமால் குணரட்ன மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# பெற்றோரிடம் பணம் சேகரிப்பதை தடுக்க விரைந்து நடவடிக்கை

## கல்வியமைச்சர் காரியவசம் பணிப்புரைப்பு



(கொழும்பு)

பாடசாலை நடவடிக்கைகள் என்ற பெயரில் பெற்றோர்களிடம் பணம் சேகரிப்பதை நிறுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு. கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் செயற்பாடுகளுக்கு என தெரிவித்து, பணம் சேகரிப்பது தொடர்பில் அண்மையில் அமைச்சரிடம் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

இந்த முறைப்பாடுகளுக்கு அமையவே குறித்த பணிப்புரையை அமைச்சர் விடுத்துள்ளார்.

நிதிசேகரிப்பு தொடர்பில் கல்வி அமைச்சின் சுற்று நிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு அமைய அனைத்து அதிகாரிகளும் செயற்பட வேண்டும் என கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மீண்டும் கடன் பெறுகிறது இலங்கை

(கொழும்பு)

இலங்கை மீண்டும் ஒரு முறை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்றுக் கொள்ளவுள்ளது.

2019ஆம் ஆண்டு இறுதியில் 1.5 பில்லியன் டொலர்களை மீளச் செலுத்தியதன் பின்னர் இந்த கடனுக்கான விண்ணப்பத்தை இலங்கை சமர்ப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தகவலை திறைசேரியின் செயலாளர் ஆர். எச்.எஸ்.சமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பேச்சு நடத்த சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டு அதிகாரிகள், பெப்ரவரி நடுப்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இதேவேளை மிலேனியம் செலேஞ் கோப்பரேசனின் 87 பில்லியன் ரூபாய் கடன் எதிர்வரும் செப்டெம்பரில் இலங்கைக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஒக்டோபரில் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பு காரணமாக இந்த கடனுதவியை மிலேனியம் செலேஞ் கோப்பரேசன் இடைநிறுத்தி வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இந்திய அணியின் தலைவராக ரோகித்



நியூசிலாந்துக்கு எதிரான கடைசி 2 ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் 'ரெகுலர்' அணித்தலைவர் விராட் ஹோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. அணித்தலைவராக ரோகித் சர்மா செயல்படவுள்ளார்.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி, 5 ஒருநாள், 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. நேப்பியரில் நடந்த முதல் போட்டியில் இந்தியா வென்றது. அடுத்த இரண்டு போட்டிகள் (ஜனவரி 26, 28) மவுண்ட் மவுன்கனுய் நகரில் நடக்கவுள்ளன. கடைசி இரண்டு ஒருநாள் போட்டி ஹாமில்டனில் (ஜனவரி 31), வெலிங் டனில் (பெப்ரவரி 3) நடக்கும். மூன்று இருபது-20 போட்டிகள் வெலிங்டனில் (பெப்ரவரி 6), ஆக்லாந்தில் (பெப்ரவரி 8), ஹாமில்டனில் (பெப்ரவரி 10) நடக்கவுள்ளன. இந்திய அணியின் 'ரெகுலர்' அணித்தலைவர் விராட் ஹோலி, தொடர்ச்சியாக போட்டிகளில் விளையாடி வருவதால் இவருக்கு ஓய்வு அளிக்க இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) நிர்வாகம் மற்றும் தேர்வுக்குழு முடிவு செய்தது.

இதனையடுத்து, நியூசிலாந்துக்கு எதிரான கடைசி 2 ஒருநாள் போட்டி மற்றும் இருபது-20 தொடரில் இவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது

துணை அணித்தலைவர் ரோகித் சர்மா, அணியை வழிநடத்த உள்ளார். தவிர ஹோலிக்கு மாற்று வீரர் தேர்வு செய்யப்போவதில்லை என, பி.சி.சி.ஐ., தெரிவித்துள்ளது.

இதற்கு முன், சமீபத்திய அவுஸ்திரேலிய தொடர் காரணமாக மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக சொந்த மண்ணில் நடந்த இருபது-20 தொடரில் ஹோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருந்தது.

இதேபோல கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ.இ..) நடந்த ஆசிய கிண்ணத் தொடரில் ஹோலிக்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. இதில் ரோகித் தலைமையிலான இந்திய அணி கிண்ணத்தை வென்றது. தற்போதைய் நியூசிலாந்து தொடருக்கு பின் இந்திய அணி சொந்த மண்ணில். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள், இருபது-20 தொடரில் (பெப்ரவரி 24, மார்ச் 13) விளையாட உள்ளது.

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

Applications are invited by me up to15th February, 2019from suitably qualified persons for the following posts.

**1. TECHNICAL OFFICER (ICT) GRADE III**

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in Science Subjects in the **Science Stream**; Subject combination/s to be decided by the Faculty concerned upon the recommendation of the Department.

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical / Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of information Communication and Multimedia Technology / Information and Communication Technology / Information Technology or Equivalent.

* Preference will be given for who have work experience in ICT

**2. TECHNICAL OFFICER (CIVIL) GRADE III**

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in **Physical Science** Stream.

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical / Vocational TrainingInstitute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Civil Engineering or Equivalent.

**3. TECHNICAL OFFICER (ELECTRICAL) GRADE III**

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in **Physical Science** Stream.

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical / Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Electrical Engineering or Equivalent.

**4. TECHNICAL OFFICER (MECHANICAL) GRADE III**

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in **Physical Science** Stream.

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Mechanical Engineering or Equivalent.

**5. TECHNICAL OFFICER (CHEMICAL) GRADE III**

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in**Science Stream.**

**AND**

(ii) (a) Diploma in **Medical Laboratory Technology**

**OR**

(b) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical / Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Chemistry / Chemical Engineering.

Note: Acceptability of the qualification mentioned in above (ii) (b) shall be judged by the Faculty Concerned.

| | | |
|---|---|---|
| **Salary Scale** | : | U-MT 1(IIIA)<br>Rs.31625-7x300;10x355-37275 p.m. as at 01.01.2020 |
| **Selection By** | : | Written and/or practical test and an interview |
| **Age Limit** | : | Age should be not less than 18 years and not more than 45 years. |

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on specified forms issued by the University. Application form and particulars for the above posts can be downloaded only from the University website www.jfn.ac.lk. Applicants should deposit Rs.100 (for each post) at any branch of the People's Bank in favour of "University of Jaffna" Account No.**"162-1-001-6-0000880"**. Applications must accompany a copy of the bank deposit slip and copies of relevant documents.

The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Deputy Registrar/Non-Academic Establishments of this University on or before 15.02.2019.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR** **23.01.2019**

# யுத்த வெற்றியின் பின்னர் நாட்டில் மீண்டும் மோதல் நிலை

## சவேந்திர சில்வாவிடம் அனுநாயக்க தேரர்

யுத்த வெற்றியின் பின்னர் மீண்டும் நாட்டினுள் மோதல் நிலைமை ஏற்படக்கூடிய அவதானம் காணப்படுவதாக அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க ஆனமடுவ தம்மதசி தேரர் தெரிவித்துள்ளார். இராணுவப் படைகளின் பிரதானி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் பீடாதிபதிகளிடம் நேற்று முன்தினம் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள சென்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஓய்வு பெற்ற யாழ்.கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் திருமதி.கடம்பமலர் விஜயராஜாவிற்கு சேவை நலன் பாராட்டு விழா இன்று 24 ஆம் திகதி பாடசாலையில் அதிபர் க.தவசீலன் தலைமையில் நடைபெறும். (இ-5)






# அரச இலக்கிய விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2019 ஆம் ஆண்டிற்கான அரச இலக்கிய விருது வழங்கல் விழாவிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதாவது 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் மார்கழி வரையான காலப்பகுதியில் எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட நூல்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்கலாம்.

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இலக்கிய துறைசார்ந்த கலைஞர்கள் குறித்த விருதிற்கான விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என நல்லூர்ப் பிரதேச செயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (இ)

# மக்கள் ஆதரவு மையத்தினரால் செயற்றிறன் வகுப்பு ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

மக்கள் ஆதரவு மையத்தின் "கல்விக்கு தோள்கொடுப்போம்" எனும் செயற்றிட்டத்தில் கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ் கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கு கணனி மயப்படுத்தப்பட்ட வகுப்பறையை உருவாக்கும் ஆரம்ப நிகழ்வு அண்மையில் ரூபாய் 25 ஆயிரம் நிதி அனுசரணையில் அவ் வட்டாரத்தின் மக்கள் பிரதிநிதி ந.கஜேந்திரகுமாரின் சிபார்சில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாடசாலையின் அதிபர் க.விவேகானந்தன், சமூக சேவையாளர்களான ஓய்வுபெற்ற யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் செ.இராமநாதன், ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் த.மகாதேவன், மக்கள் ஆதரவு மையத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.சுரேந்திரன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (இ-9)




# வழியிற் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத் திதி அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு வழியிற் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத் திதி அபிஷேகம் நாளை மறுதினம் 26 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். (இ-5)

# புகையிரதக் கடவையில் காவலாளி இல்லை!

## பாரிய அனர்த்தம் ஏற்பட முன் அதிகாரிகளே விழிப்படையுங்கள்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம்-நாவலடிப் பகுதியிலுள்ள புகையிரதக் கடவையில் காவலாளி கடமையிலில்லை எனவும் பாரிய அனர்த்தம் நிகழ முன்னர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த புகையிரதக் கடவையில் அண்மைக்காலமாக காவலாளி கடமையில் இருப்பதில்லை. அதனால் புகையிரதம் வரும் வேளைகளிலும் கடவையில் தடுப்பு இருந்தும் கடவை மூடப்படுவதில்லை. குறித்த கடவை வளைவான பகுதியில் காணப்படுவதனால் புகையிரதம்வருவதை நொடிப்பொழுதில்தான் அவதானிக்க முடிகிறது.

அதேவேளை ஏற்கனவே இக் கடவையில் ஒரு உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது. ஆகவே மீண்டும் பாரிய அனர்த்தம் நிகழ முன்னர் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-30)

# 2 இலட்சம் பெறுமதியான தளபாடங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் உடுவில் மகளிர் கல்லூரிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான வகுப்பறை தளபாடங்கள் வழங்கப்பட்டன.

உடுவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ஜெயக்காந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சார்பில்வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு பாடசாலை அதிபரிடம் தளபாடங்களைக் கையளித்தார். (இ-89)

## உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு

# பாரிய நட்டம்!

## இறக்குமதி வரி குறைந்ததால் இந்நிலை

உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரி குறைந்துள்ள நிலையில் யாழ்.மாவட்ட உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் பாரிய நட்டத்தை எதிர்நோக்க நேரிடும் என விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஒரு கிலோ உருளைக்கிழங்கிற்கான உற்பத்திச் செலவு 55 ரூபாய் எனவும் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 50 ரூபாவிற்கு விற்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

அரசாங்கம் உருளைக் கிழங்கிற்கான இறக்குமதி வரியை 20 வீதமாக குறைத்துள்ளமையே இந் நிலைமையேற்படக் காரணமென விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்மாவட்ட விவசாயிகள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் அறுவடை செய்ய இருக்கின்ற நிலையில் தமக்கான உத்தரவாத விலையொன்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெற்றுத்தர நடவடிக்கையெடுக்க கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)

# வடக்கு மாகாண அலுவலக உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை (மாதிரி வினாத்தாள்)

விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 15) 2 | 29) 2 | 46) ஆழிக்குமரன் ஆனந்தன் |
| 2) 3 | 16) 3 | 30) 2 | 47) அல்பனா |
| 3) 2 | 17) 4 | 31) லக்கல | 48) மூன்று |
| 4) 4 | 18) 3 | 32) நெற்கதிர் | 49) 2.8 வீதம் |
| 5) 4 | 19) 4 | 33) பௌத்தலோக மாவத்த | 50) யூரல் மலை |
| 6) 3 | 20) 4 | 34) டார்வின்ஸ் | 51) பூரணத்துவம் |
| 7) 1 | 21) 2 | 35) 100 ரூபாய்த் தாள் | 52) மொரஹககந்ததிட்டம் |
| 8) 2 | 22) 2 | 36) றெஜினோல்ட் கூரே | 53) 5 |
| 9) 2 | 23) 1 | 37) பரமேஸ்வரா கல்லூரி | 54) பொதுநிர்வாக அமைச்சு |
| 10) 3 | 24) 4 | 38) றிக்டர் | 55) www.np.gov.lk |
| 11) 1 | 25) 3 | 39) குடியரசுத் தலைவர் | 56) 3 |
| 12) 3 | 26) 2 | 40) அனித்தா | 57) அன்ரனியோ குட்ரேரஸ் |
| 13) 4 | 27) 4 | 41) மன்னார் குடா | 58) ராஜகிரிய |
| 14) 1 | 28) 3 | 42) காணி உறுதி வழங்குதல் | 59) மீள்சுழற்சி, மீள்பாவனை, தவிர்ப்பு |
| | | 43) நவாலியூர் சோமசுந்தரப் புலவர் | 60) நீளம்-294. 4mm அகலம்.210mm |
| | | 44) 460 கோடி | |
| | | 45) சுரக்ஸா | |

# இராசி பலன்

**மீனம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், சேமிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** வாகன சுகமுண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**கும்பம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், விட்டுச் சென்ற உறவுகள் விரும்பி வந்து சேரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | இராசி பலன் | | ராகு |
| சூரி, புத, கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம், சதயம் இரவு 4.52 மணிக்கு கன்னி-சந் | | சந் |
| சனி | குரு, சுக் | | |

**24.01.2019**

தை 10, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

சதுர்த்தி பின்னிரவு 2.40 மணிவரை

பூரம் முன்னிரவு 11.46 மணிவரை

சுபநேரம் 8.06-9.36 மணிவரை

இராகுகாலம் 2.06-3.36 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

**கடகம்:** தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தில் கலகப்பான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள் போசன சுகமுண்டு.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பர பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனக்குறைவுகள் ஏற்படலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## சித்தமருத்துவ அலகு

2017/2018 கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்தமருத்துவ பிரிவுக்கு 2017/2018 கல்வியாண்டுக்கான தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 11.02.2019 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கைதடியில் உள்ள சித்த மருத்துவ பிரிவு பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. அனைத்து புதுமுக மாணவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் தங்களுடைய பெயர்களை உறுதிசெய்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

**பதிவாளர்** (C-5279)

## The Vembadi Girls' High School Old Girls' Association- Jaffna

The Annual General Meeting of the OGA and get-together will be held on 24th February 2019 Sunday at 10 am. Lunch Tickets are available at the Office of the OGA- Jaffna from 1st February 2019.

Any suggestions to the amendment to the Constitution should be submitted to the Secretary, Office of the OGA-Jaffna, Vembadi Girls' High School on or before 08 February 2019.

All the old girls of the school are requested to grace the function. (C-5248)

**Executive Committee**

## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 32 உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/Lபல்கலைக் கழக உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு,அரசபணி
தொ.இ: B/9147

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L, வாகன ஓட்டுநர் (JCB )
தொ.இ: B/9148

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: 20 செவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Auto Mobile Motor Mechanic ( Level 4), Lab Assistant
எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்
தொ.இ: B/9149

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
உயரம்: 6'
தகைமை/தொழில்: Civil Eng(UK), Civil Engineer
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9150

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 47 1/4 செவ் 1 இல்
உயரம்: 4'10"
தகைமை/தொழில்: BA, காணி சுவீகரிப்பு அதிகாரி
தொ.இ: G/1978

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 21 1/2 சூரிசெவ் 12இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:B.Com, M.com, Australia
எதிர்பார்ப்பு:உள்நாடு, வெளிநாடு, Engineer, Accountant
தொ.இ: G/1984

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: ரோகினி 2
கி.பா: 29 செவ் 12 இல்
உயரம்: 4'10"
தகைமை/தொழில்:A/L, நூலகர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரசபணி, சைவபோசனம்
தொ.இ: G/1988

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 45 செவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:HNDA,முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரசபணி, NGO, சைவபோசனம்
தொ.இ: G/1989

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

**Balance Work on the Construction of Lecture Hall Complex for the Faculty of Management Studies & Commerce-Block (Stage II), University of Jaffna**

1. **The Chairman, Department Procurement Committee (DPC), University of Jaffna** on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for "Balance Work on the Construction of Lecture Hall Complex for the Faculty of Management Studies & Commerce - Block A (Stage II), University of Jaffna" as described below and estimated to cost of **Rs. 78.2 million(excluding VAT).**

   The construction period is 300**Days.**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C4** or above with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**

   Contact numbers are: Phone. Tel: 021-221 9201, Fax: 021-221 9201
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, from **25th January 2019** until **14th February 2019** from **9:00hrs to 15:00hrs** working days upon payment of non refundable fee of Rupees Seventeen Thousand **(Rs. 17,000/-).**
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works and Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna** to reach **on or before 14:00 hrs on the 15th February 2019.** Bids will be opened soon after closing at **14.00 hrs on the 15th February 2019** at the same venue in the presence of the bidders representatives who choose to attend.
7. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - In favour of **Vice Chancellor-University of Jaffna.**
   - For an amount of **Rs. 1,250,000.00**
   - Valid up to **14th June, 2019 (119 days** from the closing date of Bid).
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.
9. Pre bid meeting will be held at 10:00 hrs on **05th February2019** at the Board Room, University of Jaffna, Thirunelvely.

**Chairman, Procurement Committee,**
**University of Jaffna, Thirunelvely, Jaffna 23.01.2019**

(C-5775)

**Teastar Ceylon (Pvt) Ltd** வழங்கும்

KOREAN GINSENG (கொரியன் ஜின்ஸெங்)

# POWER PLUS TEA



ஆண்மைத் திறனை கையாளவும்
விந்தணு வளர்ச்சி மற்றும்
உங்கள் ஆண்மை அதிகரிக்கவும்
இதோ 100% இயற்கை தேர்வ்வு

யாழ்ப்பாணம்
சர்வதேச வர்த்தக
கண்காட்சிக் கூடத்தில் (JITF)

ஜனவரி 25, 26, 27ஆம் திகதிகளில்

**227** ஆம் இலக்க காட்சிக் கூடத்தில்

(விசேட விலை கழிவுடன்
பெற்றுக் கொள்ளமுடியும)

100% NATURAL PRODUCT

TEASTAR



# உழைப்புக்கு நியாயமான ஊதியத்தைக்கொடு

## தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி கிளிநொச்சியில் போராட்டம்







(பரந்தன்)

தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி கிளிநொச்சியில் சமத்துவம் சமூக நிதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் மக்கள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தங்களுக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா கூலி கேட்டு தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர். எனவே இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

"உழைப்பாளிகளுக்கே இந்த உலகம் என்றால் உழைக்கும் தொழிலாளர்களுக்கு ஏனிந்த அவலம்?, 1000 ரூபாய் கேட்பது குற்றமா?, 1000 ரூபா தொழிலாளர்களுக்கு வழங்குவது நட்டமா?, மலைகளை விடவும் தொழிலாளர்களின் துயரம் பெரிது, மலைகளில் கொழுந்து பறித்து வாழ்வது கொடிதினும்கொடிது, தொழிலாளர் உழைப்புக்கே ஊதியம் கேட்கின்றனர்.

முதலாளிகளின் உழைப்பில் அல்ல, நாட்டுக்காக உழைப்பவர்களின் வீட்டுத் துயரை போக்கிட உதவுங்கள்.

கேட்பது ஆயிரம் ரூபா சம்பளத்தையே, மலைகளையோ தோட்டங்களையோ அல்ல. வழங்கிடுவோம் வழங்கிடுவோம் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவு வழங்கிடுவோம், ஆயிரம் ரூபா பெறுவதற்கு உதவிடுவோம் மழை, பனி, வெயில் குளிரில் உழைக்கும் தொழிலாளர்களுக்கு நீதியான கூலியை கொடுங்கள்.

நல்லாட்சி அரசு என்ற முகமூடிக்குள் ஒழியாதே நம்மவர்களுக்கான நீதியை வழங்கப் பின்னிற்காதே..." ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். (2-312)

## கேப்பாபிலவு போராட்ட மக்கள் ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலமீட்பு போராட்டத்தில் 694 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தங்கள் காணிகள் விடுவிக்கப்படவில்லை என்ற கவலையுடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை தெற்கில் உள்ள தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்துடன் சென்று நேற்று முன்தினம் கலந்துரையாடியுள்ளார்கள்.

கேப்பாபிலவு மக்களின் காணிவிடுவிப்பு தொடர்பில் கடந்த 20 ஆம் திகதி கேப்பாபிலவு மக்களை சந்தித்த வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் காணிவிடுவிப்பு தொடர்பில் குழு ஒன்றினை அமைக்கவுள்ளதுடன் அரச தலைவரிடம் மனு ஒன்றினை கையளிக்குமாறும் தெரிவித்துள்ளதாக கேப்பாபிலவு போராட்ட மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த மக்கள் தங்கள் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்துள்ளதுடன் தங்கள் நிலைமையை ஜனாதிபதிக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்கள்.

எதிர்வரும் வாரத்தில் ஜனாதிபதியைச் சந்திக்க அனுமதி பெற்றுள்ளதாக சந்திப்பில் கலந்துகொண்ட கேப்பாபிலவுப் போராட்டத்தை வழிநடத்துபவர்களில் ஒருவரான அரியகலா தெரிவித்துள்ளார். (2-281)

## வரலாற்று பழைமைவாய்ந்த இந்து ஆலயங்களை புனித ஸ்தலங்களாக மாற்றுவதற்கு விரைவில் அமைச்சரவை பத்திரம்

### அமைச்சர் மனோகணேசன் திருக்கேதீஸ்வரத்தில் தெரிவிப்பு





(மன்னார்)

நாடு முழுவதிலும் உள்ள புகழ்பெற்ற மற்றும் வரலாற்று பழைமை வாய்ந்த இந்து ஆலயங்கள்சிலவற்றை புனித ஸ்தலங்களாக மாற்றுவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக நேற்றைய தினம் திருக்கேதீஸ்வரத்தில் இடம் பெற்ற ஒன்றுகூடலின் போது இந்துசமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்து சமய அலுவல்கள் அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து நாட்டில் உள்ள பாடல்பெற்ற அனைத்து ஸ்தலங்களுக்கும் சென்று அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடி வருகின்றார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் கருத்து தெரிவிக்கையில்,

திருக்கேதீஸ்வரத்திற்குச் சொந்தமானது. ஆனாலும் தற்போது இராணுவம், தொல்பொருள் திணைக்களம், வனவளபாதுகாப்புத்திணைக்களம் மற்றும் பௌத்த விகாரைகளுக்குள் உள்ளடக்கப்பட்ட காணிகளை விரைவில் விடுத்து மக்களுக்கும் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் குறித்த அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பிக்கும் போது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் மக்கள் பிரதி நிதிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தற்போது இந்தியாவின் நிதியுதவியுடன் நடை பெற்று வரும் அபிவிருத்தி மற்றும் கட்டுமானப் பணிகள் தொடர்பான விபரங்களையும் கேட்டறிந்தார்.

குறித்த நிகழ்வில் தேசிய அரச கரும மொழி அமைச்சின் மேலதிக செயலாளர் ரவீந்திரன், இந்து விவகார அமைச்சின் பணிப்பாளர் உமா மகேஸ்வரன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்கரா, வடமாகாண இணைப்பாளர்,மாவட்ட இணைப்பாளர் மற்றும் தீபன் மரிய சீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (2-285)

## போதைப்பொருள் ஒழிப்பு வாரம்

## மன்/புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் விழிப்புணர்வு கருத்தமர்வு





(மன்னார்)

தேசிய ரீதியில் ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பிள்ளைகளிடம் இருந்து கற்றுகொள்ளுங்கள்எனும்தொனிப் பொருளில் மன்/புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் விழிப்புணர்வு கருத்தமர்வு பாடசாலை அதிபர் கில்டா சிங்கராஜா தலைமையில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் பொது ஒன்றுகூடலின் போது இடம்பெற்றது.

குறித்த கருத்தமர்வில் பாடசாலை ரீதியில் மாணவர்கள் எவ்வாறு போதைப் பொருட்கள் பாவனையில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது தொடர்பாகவும் போதைப் பொருள் பாவனை தொடர்பான குற்றச் செயல் ஒன்றினால் பாதிக்கப்படும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் மன்னார் நகர் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி மற்றும் ஊடகவியலாளர்களினால் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

அத்துடன் மாணவர்களுடைய கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு·பேரணிகள்இடம்பெற்றன.(2-285)

## பொதி செய்யப்பட்ட மாதிரி மனித எலும்புக்கூடுகள் விமான நிலையத்தில் இன்று கையளிக்கப்படும்

(மன்னார்)

மன்னார் நகரில் சதொச விற்பனை நிலைய வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட மாதிரி மனித எலும்புக்கூடுகள் அமெரிக்கா புளோரிடாவுக்கு காபன் பரிசோதனைக்காக நேற்றையதினம் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றிலிருந்து மிகவும் பாதுகாப்பான முறையில் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு எடுத்துக் கொண்டு செல்லப்பட்டது.

மாதிரி மனித எலும்புக் கூடுகள் ஒரு சிறிய பெட்டியில் மிகவும் பாதுகாப்பான முறையில் அடைக்கப்பட்டு பி.232/18 என இலக்கமிடப்பட்ட நிலையில் பொதி செய்யப்பட்டு பொலிஸ் வாகனம் ஒன்றில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கொண்டு செல்லப்பட்டது.

இப் பொதியானது மன்னார் நீதிமன்ற சான்று பொருட்கள் காப்பாளர் பொறுப்பில் மற்றும் அவரின் உதவியாளர் ஒருவரும் இத்துடன் ஒரு பொலிஸ் அதிகாரியின் தலைமையில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கண்காணிப்பில் இப் பொதி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இப் பொதியானது நேரடியாக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு புதைகுழி அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான சட்டவைத்திய அதிகாரி சட்டவைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷவிடம் விமான நிலையத்தில்வைத்துகையளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இப் பொதியானது இன்று அதிகாலை கட்டார் எயார் விமானத்தின் மூலம் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-285)

# படைப்புழுவைக் கட்டுப்படுத்த அரசு போதிய நடவடிக்கை

## மகிந்தவின் குற்றச்சாட்டை ஏற்க முடியாது விவசாய அமைச்சர் ஹரிசன் விளக்கம்

(கொழும்பு)

பயிர்ச்செய்கையை பாதிக்கும் சேனா படைப்புழுவை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டை ஏற்க முடியாதென விவசாய அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார். தேவையான நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுத்த காரணத்தினாலேயே இன்று அதன் தாக்கத்தை கட்டுப்படுத்த முடிந்துள்ளதென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

விவசாயத்துறைக்கு பாரிய அச்சுறுத்தலாக காணப்படும் சேனா படைப்புழுவை அழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில் லையென்ற குற்றச்சாட்டை, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் நேற்று முன்தினம் முன்வைத் தார். அதற்கு நேற்றுப் புதன்கிழமை கூடிய நாடாளுமன்ற அமர்வில் பதிலளிக்கும்போதே அமைச்சர் ஹரிசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"கமநல அமைச்சை நான் பொறுப்பேற்று ஒரு மாதமே ஆகின்றது. அதற்கு முன்னரே படைப்புழுவை குறைக்க பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனால்தான் இந்த புழுவை கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

படைப்புழுவை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லையென எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றார். ஆனால், அமைச்சின் ஊழியர்கள், திணைக்கள ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

இந்தியாவிலேயே இந்த படைப்புழு கண்டுபிடிக்கப்பட்டது. சேனா படைப்புழு 100 மீற்றர் தூரத்திற்கு பறக்கக்கூடியது. அந்த வகையில் பருவப்பெயர்ச்சி மூலம் இந்தப்புழு இலங்கைக்கு வந்துள்ளது. இப்புழுவால் இலங்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என மக்களுக்கு ஊடகங்கள் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது. அதனால் இன்று அதன் தாக்கத்தை குறைக்க முடிந்தது.

விவசாய மேம்பாட்டு நிகழ்ச்சிகளிலும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஜனாதிபதி அறிவுறுத்துவதற்கு முன்னரே, அமைச்சு மட்டத்தில் செயலணி ஒன்று அமைக்கப்பட்டு சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டின் சகல பகுதிகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பதாகைகள், துண்டுப்பிரசுரம் என சகல வழிகளிலும் தெளிவூட்டப்பட்டன. மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டு தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன். ஐந்து இரசாயன கிருமி நாசினிகளும் அறிமுகப் படுத்தப்பட்டன.

இந்த படைப்புழு உணவுப் பொருட்களையே பெரும்பாலும் தாக்குகின்றது. அதனால், அதிக தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயன பதார்த்தங்களை பயன்படுத்த முடியாது. காரணம் படைப்புழு இறந்தாலும் அதனால் ஏற்படும் தாக்கம் அதிகரித்துவிடும்.

பல ஔடதங்களையும் சாம்பலை பயன்படுத்தியும் வெளிநாடுகளில் மருந்துகள் தயாரிக்கப்பட்டன. அதற்கான முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

ஒரு படைப்புழுவானது, 1000 இற்கும் மேலான முட்டைகளை இடுகின்றது. அப்படி பார்த்தால் கோடிக்கணக்கான புழு உருவாகும். ஆகவே கிருமி நாசினிகளை மட்டும் நம்பாமல் வேறு வழிகளையும் நாம் நாடுகின்றோம்.

படைப்புழுவின் பரம்பலுடன் அதனால் ஏற்படும் தாக்கத்தையும் கட்டுப்படுத்தவே முயற்சிக்கிறோம். தற்போது 120 மில்லியனுக்கும் மேலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆண் படைப்புழுவை கவர்வதற்கு ஒரு பொறி உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு கவரப்பட்டு ஆண் படைப்புழு உட்செல்லும். அப்போது அதனை அழிக்க முடியும். அத்தோடு, படைப்புழுவை உணவாகக் உட்கொள்ளும் பதார்த்தங்களையும் தேடி வருகின்றோம்.

படைப்புழுவின் சேதத்தை அளவீடு செய்ய தற்போது கள ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சோளம்போன்றவற்றில்இருந்து ஏனையவற்றிற்கு பரவாமல் தடுக்க அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தங்களை இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இந்த புழு இரண்டு மாத காலத்தில் இந்தியா முழுவதும் வியாபித்தது. குரக்கன், மரக்கறி போன்றவற்றிலும் பரவியது. ஆனால், எமது நாட்டில் பயிர்ச்செய்கை முற்றுமுழுதாக பாதிக்கப்படவில்லை. அதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## விஜயகாந்த் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் செயலாளருமான சுதர்சிங் விஜய காந்த்தை பிணையில் செல்ல அனுமதி வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று கட்டளை பிறப்பித்துள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றால் சுதர்சிங் விஜயகாந்த்துக்கு வழங்கப்பட்ட 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனைக்கு எதிரான மேன்முறையீட்டு மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணையிலுள்ள நிலையிலேயே இந்தக் கட்டளை நேற்று வழங்கப்பட்டது.

கடந்த 2013 ஆம்ஆண்டு ஜூலை மாதம் வங்கியொன்றில் அடகு வைப்பதற்கு சுதர்சிங் விஜயகாந்த் சென்றிருந்தார். அந்த வங்கியில் கடமையாற்றும் அலுவலகரின் திருட்டுப் போன நகைகள் சுதர்சிங் விஜயகாந் திடம் காணப்பட்டன. அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார், விஜய காந்த் உள்ளிட்ட 4 பேரைக் கைது செய்தனர். தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேக நபர்கள் நான்கு பேரும் ஆட் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

விஜயகாந்த் உள்ளிட்ட நான்கு பேர் மீது 116 பவுண் நகைகளைத் திருடியமை உள்ளிட்ட நான்கு குற்றச் சாட்டுக்களை முன்வைத்து கோப்பாய் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்கள் நால்வர் மீதான 2 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டன. 3 குற்ற வாளிகளுக்கான தண்டனைத் தீர்ப்பை 2018 மார்ச் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்தரன் வழங்கினார். எனினும் ஒரு குற்றவாளி தலைமறைவாகியுள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர் சிங் விஜயகாந்த் உள்ளிட்ட இருவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அதே நேரம் அதே குற்றத்துக்கு மேலும் ஒருவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன், குற்றவாளிகள் மூவரும் தலா 7 லட்சம் ரூபா இழப்பீட்டை நகையின் உரிமையாளருக்கு வழங்க வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்று தீர்ப்பளித்தது.


இந்த நிலையில் சுதர் சிங் விஜயகாந்த் சார்பில் அவரது சட்டத்தரணி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவை சமர்ப்பித்தார்.

தண்டனைக் கைதி சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதால் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு விஜயகாந்த் சார்பில் அவரது சட்டத்தரணி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் 2018 ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் திகதி விண்ணப்பம் செய்தார். அந்த விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் நிராகரித்தார்.

இந்த நிலையில் விஜயகாந்த் சார்பில் நீதவான் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்ட பிணை விண்ணப்பம் மீதான கட்டளையை சீராய்வு செய்யும் மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு மீதான விசாரணைகள் இடம் பெற்று வந்தன. சீராய்வு மனுமீதான கட்டளையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் நேற்று வழங் கினார்.

தண்டனைக் கைதியின் மேன்முறையீட்டு மனு மீதான பிணை விண்ணப்பத்தை நிராகரித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளையை நிராகரித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கட்டளையிட்டது. மேன்முறையீட்டாளரை நீதவான் நீதிமன்றின் ஆரம்ப பிணை முறையில் விடுவிக்குமாறும் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (இ-9)

## குறை'களை' பதிகம் ⑪



### நாமிருவர் நமக்கேன் ஒருவர்

அந்தக்காலம் அது... அது... அது...
வெள்ளாமை விதைத்து
இரவு பகல் பாடுபட்டு
நல்ல விளைச்சல் கண்டு
நஞ்சில்லா உணவதனை
நாளும் பொழுதுமுண்டு
பத்துப் பிள்ளை பெற்ற- எம்
முப்பாட்டன் காலத்தில்
முழுமைபெற்றிருந்தது எம்மினம்

இந்தக் காலம் இது... இது... இது...
இயந்திரத்தைக் காலில் கட்டி
இன்னல்படும் வேளைதனில்
பிள்ளை பெற நேரமெங்கே

நாமிருவர் நமக்கிருவர் என்று-பின்
நாமிருவர் நமக்கொருவர் என்று- இப்போ
நாமிருவர் நமக்கேன் ஒருவர் என்று நழுவிவிட
நாதியற்றுக் கிடக்கிறது நம்மினம்

போரென்ற அரக்கன் எம்மை
பொடிப்பொடியாய்த் தின்றுதள்ள
மிஞ்சியிருந்த சிலர்
அஞ்சி அயல் நாடோடியாகிட
பெரும்பான்மை பெருகுகிறது
சிறுபான்மை சிதறிச் சின்னாபின்னமாகிறது

என்னினமே! இன்னும் நாம்
ஒன்றிரெண்டு போதுமென்றுஇருந்துவிட்டால்
இனமொன்று இருந்ததாய்
எழுத்துருவில் மட்டுமே இருக்கும்

தன்னிறைவு காண தரணியை நாம் ஆள
அந்தக் காலம் அது... அது... அது... போல்
வாழ்வோம் உயர்வோம்
எம்மையும் எம்மினத்தையும்

மாவை. நா. கஜேந்திரன்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 180 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 65 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 220 | 250 | 300 |
| தக்காளி | 100 | 80 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 40 | 60 |
| கோவா | 80 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 100 | 120 |
| பூசணி | 50 | 30 | 40 | 40 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 100 |
| பாகற்காய் | 120 | 100 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 140 | 130 | 150 | 150 |
| லீக்ஸ் | 120 | 120 | 90 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 70 | 120 |
| கறிமிளகாய் | 200 | 120 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 600 | 500 | 600 |
| போஞ்சி | 60 | 100 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 150 | 100 |
| கீரை-1பிடி | 30 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 100 | 130 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 120 | 100 | 160 |
| முள்ளங்கி | 40 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 120 | 50 |

## மன்னார் வளைகுடாவில் சி-விஜில் ஒப்ரேசன்

# இராமேஸ்வரம், பாம்பன் பாலத்திற்கு குண்டு வைத்து தகர்க்க முயற்சி!

## 11 பேர் கைது; மெரைன் பொலிஸார் அதிரடி

(இராமேஸ்வரம்)

மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தி கடல் பகுதிகளில் நேற்றுக் காலை முதல் சி- விஜில் ஒப்ரேசன் நடைபெற்றது. இதில் 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தியா முழுவதும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலுக்கமைய நேற்றும் இன்றும் கடலோர பகுதிகளில் சி விஜில் ஒப்ரேசன் நடைபெறுகிறது.

இதனை தொடர்ந்து கடலோர காவல் பொலிஸ் குழுமம், அதிவிரைவு ரோந்து படகில் பாம்பன், மண்டபம், தனுஷ்கோடி, ராமேஸ்வரம் கோயில் தனுஷ்கோடி மணல் திட்டுகள் உள்ளிட்ட இராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் கடலோர காவல் படை, கடற்படை, மத்திய, மாநில பாதுகாப்பு வட்டாரங்கள் தீவிர சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இந் நிலையில் நேற்றுக் காலை மெரைன் பொலிஸார் மன்னார் வளைகுடா கடற்கரை பகுதியான தங்கச்சிமடத்தில் இருந்து இரண்டு நாட்டிகள் கடல் மைல் தூரத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது சந்தேகத்திற்கு இடமாக சென்ற விசைபடகை மறித்து அதிலிருந்த ஏழு பேரை கைது செய்து விசாரணை நடத்தியதில் பாம்பன் சாலைப் பாலம் மற்றும் இராமேஸ்வரம் கோவிலில் குண்டு வைப்பதற்காக வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதே போன்று இராமேஸ்வரம் நகர் பகுதியில் சந்தேகத்திற்க்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த நான்கு பேரை பிடித்து விசாரணை நடத்தியதில் குண்டு வைக்க வந்தது தெரியவந்ததையடுத்து அவர்களும் கைது செய்யப்பட்டனர்.

மொத்தமாக 11 பேர் கைது செய்யப்பட்டு பின் மண்டபம் மெரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்ற னர்.

விசாரணையின் போது கைது செய்யப்பட்டவர்கள் சென்னையிலிருந்து வந்த இந்திய கடற்படை மற்றும் கொமாண்டோ படையைச் சேர்ந்தவர்கள் என மெரைன் பொலிஸார் தெரிவித்தனர். மும்பை குண்டு வெடிப்பு நடைபெற்று பத்து ஆண்டுகளுக்கு பின் இந்திய அளவில் நடைபெறும் சி விஜில் ஒப்ரேசன் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஆண்டுக்கு ஒருமுறை மத்திய உள்துறை அமைச்சகம் இது போன்ற ஒப்ரேசனை நடத்தி பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறது. அதே போல இந்த ஆண்டில் சி விஜில் ஒப்ரேஷன் நேற்றுத் தொடங்கி இன்று மாலை வரை தொடரும் எனவும் கடலோரப் பகுதிகளில் யாரேனும் அந்நியர்கள் தென்பட்டால் தகவல் கொடுக்க மீனவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

## ரணிலின் 5 ஆவது படத்தையும் தொங்கவிட வேண்டும்

### மகிந்த முன் கம்மன்பில நக்கல்



(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் காரியாலயத்தில் தொங்கவிடப்பட்டிருந்த படங்களை பார்த்து, ரணில் விக்கிரமசிங்கவின் 4 படங்கள் இருக்கின்றன. விரைவில் 5 ஆவது படத்தையும் தொங்கவிட வேண்டும்என உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டட தொகுதியில் இருக்கும் எதிர்க்கட்சி தலைவரின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ கடமைகளை ஏற்றுக் கொண்டார்.

இதன்போது அங்கு வைக்கப்பட்டிருந்த ஆவணத்தில் கைச்சாத்திட்டபின்னர் குழுமியிருந்தவர்களை நோக்கி, விரைவில் இந்த காரியாலயத்தில் இருந்து வெளியேற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என மகிந்த தெரிவித்தார்.

இதன்போது அருகில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, பாராளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சி தலைவராக இருந்தவர்களின் புகைப்படங்களுடன் அந்த காலப்பகுதியும் தெரிவிக்கப்பட்டு எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் தொங்கவிடப்பட்டிருந்த படங்களை பார்த்து, ரணில் விக்கிரமசிங்கவின் 4 படங்கள் இருக்கின்றன.

விரைவில் 5 ஆவது படத்தையும் தொங்கவிட வைக்க வேண்டும் என மகிந்த ராஜபக்ஷவை பார்த்து தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ, அது விரைவில் இடம்பெறும். அதற்கு தேவையான வேலைத்திட்டங்களை நாங்கள் மேற்கொள்ள வேண்டும். விரைவில் பாராளுமன்றத்தின் இரண்டாம் மாடிக்கு (பிரதமர் காரியாலயத்துக்கு) செல்ல பிரார்த்தியுங்கள் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# தமிழர்கள் அதிகம் தெரிவு செய்யப்பட்டதால் பரீட்சை முடிவுகளை இடைநிறுத்தவில்லையாம்

## அமைச்சர் மத்தும பண்டார விளக்கம்



(கொழும்பு)

தமிழர்கள் அதிகமாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள் என்பதற்காக அரச நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை முடிவுகள் எதுவும் இடை நிறுத்தப்படவில்லையென பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையின் வினாத்தாள் பரீட்சைக்கு முன்னர் வெளியானதாலேயே அதன் முடிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் தமிழர்கள் அதிகம் தெரிவானதால் அந்தப் பரீட்சை முடிவுகளை இடைநிறுத்தி, அதனை இரத்துச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டு, நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கள் விடுக்கப்பட்ட நிலையிலேயே பரீட்சை முடிவுகள் இடைநிறுத்தப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டினார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை மறுத்த அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுவதுடன், விசாரணைகளின் பின்னர் எவருக்கும் அநீதி இழைக்காதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

எந்தவொரு இனத்தவருக்கும் அநீதி ஏற்படும் வகையில் அரசாங்கம் செயற்படாது.

பரீட்சைக்கு முன்னர் வினாத்தாள் வெளியானதாலேயே அது குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன. சிறிதரன் எம்.பி. முன்வைத்த குற்றச்சாட்டில் உண்மை இல்லையென்றும் தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக்கள் கிடைத்த பின்னரே பரீட்சை முடிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எனினும், பரீட்சையில் எந்தவித மோசடியும் இடம்பெறவில்லையென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமிழ்மொழிமூலமானவர்கள் அதிகமாகத் தெரிவானதால் பரீட்சை பெறுபேறுகளை இடைநிறுத்தி வைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## கொழும்பு மாநகர சபை கட்டளைச் சட்டம் தமிழில்



(கொழும்பு)

இலங்கையில் எந்த தொரு மாநகர சபையிலும் தமிழில் இல்லாத மாநகர சபைக் கட்டளைச் சட்டம் முதன் முறையாக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜி.விஷ்ணுகாந்தின் முயற்சியால் நிறைவேற்றப்படவுள்ளது.

150 வருடகால பழைமை வாய்ந்த கொழும்பு மாநகர சபையில் தமிழில் கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்ற அமைச்சர் மனோகணேசனின் கோரிக்கைக்கு அமைவாகவே இலங்கை சட்ட வரைபு திணைக்களத்தின் ஊடாக மொழிபெயர்ப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-10)


## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2017/2018 (வெளிவாரி)**
**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2017 (9ஆம் பிரிவு)**

மேற்படி குறித்த பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான தெரிவுப்பரீட்சையானது எதிர்வரும் 27.01.2019 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் 25.01.2019 (வெள்ளிக் கிழமை) காலை 09.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரையான காலப்பகுதியில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (021-222-3612) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**23.01.2019** (C-5278)



**University of Jaffna**
**FACULTY OF MEDICINE**
**POST OF DEMONSTRATORS (ON CONTRACT)**
**Walk-in-interview**

Walking interview for the post of Temporary Demonstrator will be held on 05.02.2019 2.00 p.m at the Board Room, Faculty of Medicine.

**Qualifications: MBBS**

Note :- Candidate those who are awaiting for the results of the Final examinations are expected to attend the interview.

Candidates those who are requested to appear withoriginal rele vant certificates with the copy, National Identity card and **self-prepared applications.**

**Registrar**
**University of Jaffna**

(C-5248)


## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் (வட மாகாணம்) வருடாந்த பொதுக்கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை மின்சார சபை மின்பாவனையாளர் சேவை நிலையம் சுன்னாகத்தில் தலைவர் வ.சுப்பிரமணியம் தலைமையில்நடைபெறும்இ


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# முல்லைத்தீவில் நிலக்கடலை, கௌபி பயிர்களில் படைப்புழுவின் தாக்கம் இனம் காணல்

## பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் உகநாதன் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலை கௌபி போன்ற பயிர்களிலும் படைப்புழுவின் தாக்கம் இனங் காணப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், விவசாயத்துறைக்கு அச் சுறுத்தலாகவுள்ள சேனாப் படைப் புழுவின் தாக்கம் நாட்டின் பல பாகங்களிலும் வேகமாகப் பரவி வருகின்றது.

இந்நிலையில் வடக்கு மாகாணத்தின் முல்லைத் தீவு மாவட்டத்தின் குமுழமுனை, கொக்கிளாய் போன்ற பகுதிகளில் இந்தப் படைப்புழுவின் தாக்கம் காணப்பட்டது.

இவ்வாறு காணப்பட்ட இப்புழுவின் தாக்கம் அளம்பில்,புதுக்குடியிருப்பு,தேராவில் முள்ளியவளை போன்ற பகுதிகளில் பரவியிருந்தன.

தற்போது நிலக் கடலைச் செய்கையிலும் இதன் தாக்கம் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு வினவிய போது ஏற்கனவே மேற் குறிப்பிட்ட இடங்களில்சோளம் இறுங்கு போன்ற பயிர்களில் இந்தப்புழுவினுடைய தாக்கம் காணப்பட்டது.

இந்தப்புழுவின் தாக்கமானது நூறு வரையான பயிர்களை தாக்கக்கூடியதாக உள்ளது என்று ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை. கோடாலிக்கல் ஆகிய பகுதிகளில் நிலக்கடலை ,கௌபி ஆகிய பயிர்களில் இந்தப் புழுவினுடைய தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான இந்தப்படைப்புழுவின் தாக்கம் தொடர்பில் அவதானிக்கும் விவசாயிகள் மாகாண விவசாயத்திணைக்களத்தின் மூலமோ அல்லது அந்தந்தப்பகுதி விவசாய போதனாசிரியர்களையோ தொடர்புகொண்டு அதற்கான ஆலோசனைகளைப் பெற்று கட்டுப்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (2-315)

### கல்லுமலை விநாயகர் ஆலய பிரச்சினை

# நிர்வாக சபையினர் நேரில் சென்று சித்தார்த்தன் எம்.பியுடன் ஆராய்வு



(வவுனியா)

வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயத்தை தொல்பொருள் திணைக்களத்தினர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பதிவுசெய்து தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமாக்குவதற்கு மேற்கொண்டுள்ள அத்துமீறிய செயற்பாடுகள் தொடர்பாக சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலய நிர்வாக சபையினரும், சமளங்குளம் கிராம மக்களும் இணைந்து நேற்று முன்தினம் புளொட் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தனைச் சந்தித்து உரையாடியதுடன், இது தொடர்பாக உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம் கடந்த 1952 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களினால் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது. இதேவேளை இக் கோவில் அமைந்துள்ள மலையில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற் தூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டடங்கள் என்பன காணப் படுகின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன் தொல்பொருள் திணைக்களத்தினால் கல், மணல் மற்றும் கட்டடப் பொருட்கள் இவ்வளாகத்தில் இறக்கப்பட்டு மேற்படி சின்னங்களை புனரமைக்க முயற்சிக்கப்பட்டபோது, ஆலய நிர்வாகத்தினரும், பொது மக்களும் எதிர்ப்பு தெரிவித்ததால் அவ்வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

இவ்வாலயத்தில் பரம்பரை பரம்பரையாக தாம் வழிபட்டு வருவதாகவும், தற்போது தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தம் என்று தெரிவித்து புத்தர் சிலையை ஸ்தாபிக்க முயல்வதாகவும் அப்பகுதி மக்கள் இதன் போது குற்றம் சுமத்தியிருந்தனர். (2)

வன்னி வலம்

### வவு.முஸ்லிம் மகா வித்தி. மாணவர்கள்

# போதைப்பொருள் ஒழிப்பை வலியுறுத்தி கவனயீர்ப்பு







(குருமன்காடு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவிற்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "போதையிலிருந்து விடுதலைப் பெற்ற நாடு" போதைப்பொருள் தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "தேசிய போதைப் பொருள் தடுப்பு- பாடசாலை வாரம்" ஜனவரி 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்கடைவாக வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் போதைப் பொருள் ஒழிப்பை வலியுறுத்தி நேற்றுக்காலை கவனயீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையின் அதிபர் ரம்சீன் தலைமையில் இடம்பெற்ற போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்துரைகளைத் தொடர்ந்து முஸ்லிம் மகா வித்தியாலய முன்றலில் இருந்து குருமன்காடு சந்திவரை சென்ற ஊர்வலம் மீண்டும் அங்கிருந்து பாடசாலையை வந்தடைந்தது.

இதன்போது "போதை நாட்டுக்கு கேடு: அதை ஒழிக்க ஒன்றிணைவோம், எதிர்கால சந்ததியை வளர்க்க போதையை தடை செய், போதை அது சாவின் பாதை" போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியும் ஊர்வலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி, எம். லிரீப், கிராம சேவகர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பொலிஸ் உத்தியோகத்தரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-250)

# நாகேந்திரபுரம் கமக்கார அமைப்பின் மீள் புனரமைப்பு இடைநிறுத்தம்

### பொலிஸார் வரவழைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி புளியம் பொக்கணை நாகேந்திரபுரம் கமக்கார அமைப்பின் மீள்புனரமைப்பின் போது ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக குறித்த அமைப்பின் புனரமைப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை அங்கே ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக பொலிஸார் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள நாகேந்திரபுரம் கமக்கார அமைப்பிற்கான புதிய நிர்வாகத்தெரிவு நேற்று முற்பகல் 11 மணியவில் நாகேந்திரபுரம் பொதுநோக்குமண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த கூட்டமானது விவசாயிகளுக்கு பொது அறிவித்தல் விடப்படாமல் நிவாரணம் வழங்குவதாக மக்களை வரவழைத்து கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதனால் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாகவும் கடந்த நிர்வாகத்தின் முறைகேடுகள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் கூட்டம் இடைநிறுத்தப் பட்டுள்ளது.

ஆரம்பத்தில் குறித்த பிரதேசத்தின் முன்னைய நிர்வாகம் மானிய உர விநியோகத்தில் மோசடிகளை செய்ததாக விவசாயிகளால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (2-315)

# ஆசிரியைகள் இருவரை கடத்த முற்பட்ட குழுவினர் மடக்கிப்பிடிப்பு

## இருவர் தப்பியோட்டம்

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் ஏ-32 வீதியால் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த ஆசிரியைகள் இருவரைக் கடத்த முற்பட்ட காடையர்குழுவினரை இராணுவம், மக்கள் ஆகியோர் மடக்கி பிடித்தனர்.

கடந்த 21 ஆம் திகதி காலை 6.50 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து ஜெயபுரம் பாடசாலைக்கு ஏ-32 வீதியூடாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஆசிரியைகள் இரு வரை பூநகரி ஜெயபுரம் மண்டைக்கல்லாறு பாலத்திற்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் வைத்து வழிமறித்த நால்வர் கொண்ட காடையர் குழுவினர் அவர்களை அச்சுறுத்தி காட்டுப் பகுதிக்குள் கடத்திச் செல்ல முற்பட்ட வேளை ஆசிரியைகள் இருவரும் செய்வதறியாது அலறியுள்ளனர்.

அவர்கள் காட்டுப் பகுதியில் கத்தும் சத்தம் கேட்டு வீதியால் சென்ற மக்களும் காட்டுப் பகுதிக்குள் முகாம் அமைத்திருந்த இராணுவத்தினரும் அவ்விடத்திற்கு விரைந்துள்ளனர். அதனை அவதானித்த காடையர்கள் ஆசிரியைகளைக் கடத்தும் முயற்சியைக் கைவிட்டு அவர்கள் அணிந்திருந்த தங்கச் சங்கிலிகளை அறுத்துக்கொண்டு ஓட முற்பட்ட வேளை இராணுவத் தினரும் மக்களும் இணைந்து காடையர்கள் இருவரைப் பிடித்து ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மற்றைய கடத்தல்காரர்கள் இருவரும் தப்பிச் சென்றுள்ளதாகவும் கூறப் படுகின்றது.

பிடிபட்ட இருவரும் விசுவமடு, முள்ளியவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-281)

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகள் இராணுவம் சுத்திகரிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மழைவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 48 கிணறுகள் படையினரால் சுத்திகரிப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த டிசெம்பர் மாதம் பெய்த கன மழையையடுத்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மக்களின் கிணறுகளில் வெள்ள நீர் நிரம்பிக்கொண்டதில் மக்கள் குடிதண்ணீர் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள படையினரால் 48 கிணறுகள் நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டு சுத்திகரிப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 30 பொது மக்களின் கிணறுகளும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 18 பொது மக்களின் கிணறுகளுமே இவ்வாறு படையினரால் சுத்திகரிப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-315)



# பாரதம்

## காஷ்மீரில் 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(ஜம்மு)

தெற்கு காஷ்மீர் ஷோபியான் மாவட்டத்தில் உள்ள ஹெஃப் ஷெர்மல் என்ற கிராமத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் அதிகாலையில் அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது ஏற்பட்ட மோதலில் 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அங்கு பூமிக்கு அடியில் இருந்த பதுங்கு அறையும் அழிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் ஒருவர் சாமுவேல் ஹக் என அடையாளம் காணப்பட்டார். ஐபிஎஸ் அதிகாரி ஒருவரின் சகோதரரான இவர், தனது யுனானி மருத்துவப் படிப்பை பாதியில் விட்டு ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பில் சேர்ந்தார்.

இவரை தேசிய நீரோட்டத்தில் கொண்டுவரும் முயற்சி பலனளிக்காமல் போனதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எஸ்.பி. வைத் தெரிவித்தார். ஜம்மு-காஷ்மீரில் நேற்று முன்தினம் நடந்த 2ஆவது என்கவுன்ட்டர் இதுவாகும். (4-7)

## மேகதாது விவகாரம்

# கர்நாடக அரசுக்கு எதிராக தமிழக அரசு மனுத்தாக்கல்

(சென்னை)

மேகதாது விவகாரத்தில் கர்நாடக அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் பொய்யென தமிழக அரசு தரப்பில் எதிர் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கர்நாடக அரசுக்கு எதிரான பதில் மனுவை தமிழக அரசு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "காவிரி மேலாண்மை ஆணையத்தின் அனுமதி பெறாமல் மேகதாதுவில் அணை கட்டுவது தொடர்பாக மத்திய அரசுக்கு வரைவு செயற்றிட்டத்தை கர்நாடக அரசு தாக்கல் செய்துள்ளமையானது, காவிரி நீர் பங்கீடு தொடர்பாக காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிரானதாகும்.

மேலும் கர்நாடக அரசின், மேகதாது தொடர்பான அறிக்கையில், இரு மாநிலங்களுக்கும் தேவையான நீரின் அளவை பங்கீடு செய்து கொள்வதற்கே இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறதென சாத்தியமற்ற பொய்யான விடயத்தை கூறியுள்ளது.

ஆனால், பெருமளவு நீரை தங்களின் பக்கத்தில் தேக்கி வைத்து கொள்வதற்கான முயற்சியாகவே இத்திட்டத்தை செயற்படுத்த கர்நாடக அரசு முயற்சிக்கிறது.

குறித்த செயற்பாடு காவிரி நடுவர் மன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்பை அவமதிக்கும் செயலாகும்.

ஆகவே தமிழக அரசின் மனுவை ஏற்றுக் கொண்டு நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக கர்நாடக அரசு மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்னும் இடத்தில் அணைக் கட்டும் கர்நாடக அரசின் சாத்தியக் கூறு அறிக்கைக்கு மத்திய நீர்வள ஆணையம் ஒப்புதல் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# இந்தோனேசியாவி

## ஆறு பேர் பலி; 10

(மொஸ்கோ)

இந்தோனேசியாவின் சுலவேசிய மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 6 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 10 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்தோனேசியா மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த பகுதியாகும். இதன் தெற்கு சுலவேசி மாகாணத்தில் நேற்றுக் காலை கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் தென் சுலவேசியில் வீடுகள், பாலங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீட்புப்



பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த துயரச் சம்பவத்தில் 6 பேர் பலியாகியுள்ளனர். 10 பேர்

## ஐ.எஸ்.இயக்கத்துடன் தொடர்பு
## 9 பேர் கைது

(டில்லி)

ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் இந்தியாவின் மராட்டிய மாநிலத்தில் 9 பேர் மராட்டிய பயங்கரவாத தடுப்பு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்ருத் நகர், கவுசா, மோடி பக், அல்மாஸ் காலனி ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சோதனையின் போது இரசாயனங்கள், அசிட் போத்தல்கள், கூர்மையான ஆயுதங்கள், கையடக்கத் தொலைபேசிகள், வன் தட்டுகள் (ஹார்டு டிஸ்க்), சிம் அட்டைகள் போன்றவற்றையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது குற்றச் சதி நடவடிக்கையின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன. (4-7)

## ஹூவாவி நிறுவன
## நாடு கடத்துவதற்கா

(வோஷிங்டன்)

கனடாவில் கைது செய்யப்பட்ட ஹூவாவி நிறுவனத்தின் தலைமை நிதி நிர்வாக அதிகாரியை நாடு கடத்துவதற்கான முயற்சிகள் தொடரும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சீனாவின் சரணடைதல் ஒப்பந்தத்தை அமெரிக்காவும், கனடாவும் மீறியுள்ளதாக சீன வெளியுறவுத் துறை அமைச்சு குற்றம் சாட்டியது.

இந்நிலையில், அமெரிக்க நீதித்துறை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறானதொரு அறிவிப்பை விடுத்துள்ளது.

இதேவேளை, சட்டத்தின் விதிகளை அமுல்படுத்துவதற்கான கனடாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் பரஸ்பர முயற்சியை பாராட்டுவதாகவும் நீதித்துறை குறிப்பிட்டுள்ளது.

## ஜெயலலிதாவுக்கு மெரினாவில் நினைவிடம் அமைக்க தடையில்லை

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

மெரினா கடற்கரையில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு நினைவிடம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடரப்பட்ட வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.



சென்னை மெரினா கடற்கரையில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சமாதியில், 50 கோடி ரூபாய் செலவில் நினைவிடம் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், தேசிய மக்கள் கட்சித் தலைவர் எம்.எல்.ரவி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். அந்த மனுவில், "சொத்துக்குவிப்பு வழக்கில் விசாரணை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஜெயலலிதாவுக்கு, அரசு பணத்தில் நினைவிடம் அமைக்கக் கூடாது.

மக்களின் வரிப்பணத்தை, பாடசாலைகள், சுகாதார வசதிகள் ஏற்படுத்துவது உள்ளிட்ட முதன்மையான பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமே தவிர ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவருக்கு நினைவிடம் அமைக்கக் கூடாது. அப்படி நினைவிடம் அமைப்பது தவறான முன்னுதாரணமாகிவிடும். இனிமேல் மெரினாவில் நினைவிடங்கள் கட்ட அனுமதிக்கக் கூடாது" என தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் மனுதாரர், அரசு தரப்பு வாதங்கள் நிறைவடைந்தது. இந்நிலையில், நேற்று புதன்கிழமை இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள் சத்யநாராயணன், ராஜமாணிக்கம் அமர்வு, அரசு நிதியில் ஜெயலலிதா நினைவிடம் கட்டுவதை எதிர்த்த சட்டத்தரணி எம்.எல். ரவியின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிப்பதற்கு முன்பாக ஜெயலலிதா இறந்துவிட்டதால் தண்டனை அறிவிக்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டியுள்ள நீதிபதிகள், அதனடிப்படையில் ஜெயலலிதா தண்டிக்கப்பட்ட குற்றவாளி இல்லை என்ற அரசு தரப்பு விளக்கத்தை ஏற்று மனுவை தள்ளுபடி செய்வதாக உத்தரவிட்டனர்.

எதிர்காலத்தில் அரசு எடுக்கும் கொள்கை முடிவுகள் கட்டடங்கள் கட்டுவது தொடர்பாக இல்லாமல், பொதுமக்கள் நலன் சார்ந்த கல்வி, சுகாதாரம், அடிப்படை வசதிகளுக்கானதாக இருக்க வேண்டும் என தமிழக அரசை அறிவுறுத்தியுள்ளனர். (4-7)

## சிம்பாவேயில் தொடரும் போராட்டம்
### டாவோஸ் பயணத்தை ரத்து செய்த ஜனாதிபதி

(ஹராரே)

சிம்பாவேயில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை வெடித்துள்ள நிலையில், டாவோஸ் பயணத்தை பாதியில் இரத்துச் செய்த ஜனாதிபதி எமர்சன், உடனடியாக நாடு திரும்பினார்.

சிம்பாவேயில் கடந்த வாரம் பெற்றோல், டீசல்விலை கணிசமாக உயர்த்தப்பட்டது. இந்த விலை உயர்வு அறிவிப்பை ஜனாதிபதி எமர்சன் மனாங்காக்வா அறிவித்ததில் இருந்து எதிர்க்கட்சியினர், வர்த்தக சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் போராட்டம் நடத்திவருகின்றனர். குறிப்பாக தலைநகர் ஹராரே, தென் மேற்கு நகரமான புலவாயோ போன்ற இடங்களில் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு பாதுகாப்பு படையினரும் பொலிஸாரும் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதனால் இருதரப்புக்குமிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. போராட்டக்காரர்களை பொலிஸார் கண்மூடித்தனமாக தாக்கி கைது செய்கின்றனர். இந்த வன்முறைப் போராட்டம் மற்றும் பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைகளில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த சூழ்நிலையில், உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகருக்கு சென்றிருந்த ஜனாதிபதி எமர்சன் மனாங்காக்வா, மாநாட்டில் பங்கேற்காமல் நேற்று முன்தினம் இரவே நாடு திரும்பினார்.

பின்னர் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெற்றோல், டீசல் விலையை உயர்த்தியது சரியான நடவடிக்கைதான் என்றும் பாதுகாப்பு படையினர் வன்முறையில் ஈடுபட்டது தொடர்பாக விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அதேசமயம் போராட்டக்காரர்களுக்கும் ஜனாதிபதி எமர்சன் மனாங்காக்வா, கடும் கண்டனம் தெரிவித்தார். போராட்டம் நடத்த அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால் இந்த போராட்டம் அமைதியான போராட்டம் அல்ல என்று அவர் தெரிவித்துள்ளார். போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டதுடன், பொலிஸ் நிலையங்களை சூறையாடி, ஆயுதங்கள் மற்றும் சீருடைகளை திருடிச் சென்றதாகவும் அவர் குற்றம்சாட்டினார். (4-7)

## அமெரிக்க ஆ

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவால் நதியின் அழகை மேலும் அழகூட்டும் வகையில் பனி உறைந்து நிலவைப்போல் காட்சியளிக்கிறது.

அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் கடும் குளிர் மற்றும் பனிப் பொழிவு ஏற்பட்டுள்ள நிலையில், வெஸ்ட்புரூக் பகுதியில் உள்ள ஆற்றின் மீது பிரமிப்பூட்டும் காட்சி உருவாகியுள்ளது. ஆற்றின் இயற்கை அழகிற்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக, பனி கொட்டித் தீர்த்து ஆற்றின் படுகை நிலா போல் மாறி காணப்படுகிறது.

வெப்ப நிலையானது படிப்படியாக வீழ்ச்சியடைந்ததால், மணற்பாறைகளிலிருந்து வெளியேறும் நீர்க்கசிவு, பனி தகட்டினை ஏற்படுத்தியுள்ளது. இந்த மாபெரும் சுழலும் பனி தகடு 90 மீற்றர் பரப்பளவில் உள்ளது.

இது குறித்து விஞ்ஞானிகள்



# வெளிநாடு

## ...ாவில் நிலச்சரிவு : 10 பேர் மாயம்



காணாமல் போயுள்ளனர். மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நிலச்சரிவினால் கோவாஸ் மாவட்டம் தான் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்கள் அனைவரும் இந்த பகுதியைச் சேர்ந்தவர்கள்.

சிலர் நிலச் சரிவால் புதைந்தும், சிலர் மின் சாரம் தாக்கியும் இறந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களை வெளியேற்றி முகாம்களுக்கு அழைத்து செல்லும் பணி நடைபெறுகிறது.

நிலச்சரிவினால் இப்பகுதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. (4-7)

## லசா காய்ச்சலால் 16 பேர் உயிரிழப்பு

(லாகோஸ்)

நைஜீரியாவில் வேகமாக பரவி வரும் புதிய லசா காய்ச்சலால் 16 பேர் பலியாகியுள்ளனர்.

உலகின் மிக மோசமான நோய்களில் ஒன்றான லசா காய்ச்சல் கடந்த ஆண்டு தொடக்கத்தில் திடீரென வேகமாக பரவி, 23 நாடுகளை தாக்கி, 171 பேரைக் கொன்றது. இந்த நோய் நைஜீரியாவில் மீண்டும் பரவி வருகிறது.

நைஜீரியாவில் லசா காய்ச்சலுக்கு இதுவரை 16 பேர் பலியாகியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது 26.7 சதவிகித இறப்பு விகிதம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய மையக் கண்காணிப்பு அமைப்பு நேற்றைய தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டின் துவக்கத்தில் இருந்து 172 நோயாளிகள் லசா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இருப்பதாக சந்தேகிக்கப்பட்டது. பரிசோதனையின் முடிவில் 60 பேருக்கு உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் நைஜீரியாவின் 36 மாநிலங்களில் உள்ள ஏழு இடங்களிலும், அபுஜாவின் தலைநகரத்திலும் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் நைஜீரிய சுகாதார அதிகாரிகள், உலக சுகாதார அமைப்பு மற்றும் நோய் கட்டுப்பாட்டுக்கான அமெரிக்க மையங்களுடன் இணைந்து மேற்கொள்கின்றனர்.

லசா வைரசானது மார்பர்க் மற்றும் எபோலா எனும் இரண்டு கொடிய வைரஸ்களின் குடும்பத்தைச் சார்ந்தது. இதனால் கடுமையான காய்ச்சல், வாந்தி மற்றும் இரத்த சோகை போன்ற பிரச்சினைகள் ஏற்படும். லசா எனும் பெயர் வடக்கு நைஜீரியாவின் லசா நகரத்திலிருந்து வந்ததாகும். இந்நோய் 1969 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது.

இந்த வைரஸ் எலிகள் மூலமாகவும், இந்நோய் பாதிக்கப்பட்டவர்களின் தொற்றினாலும் பரவ அதிக வாய்ப்புள்ளது. மேலும் இந்நோய் பரவுவதை தடுக்க சுகாதாரத்துடனும், எலிகளின் தொற்று இல்லாமலும் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## ...ுவன தலைமை அதிகாரியை ...தற்கான முயற்சிகள் தொடரும்

### அமெரிக்கா மிரட்டல்

இந்நிலையில் இவ்விகாரம் தொடர்பாக டாவோசில் நடைபெற்றுவரும் உலக பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய ஹுவாவி நிறுவனத் தலைவர், இதில் விரைவான தீர்வை எதிர்பார்ப்பதாகவும், ஆனால் இது தொடர்பாக நேரடியாக தொடர்பு கொள்ள போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

சீனாவின் ஹுவாவி நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி Meng Wanzhou கனடாவின் வான்கூவர் விமான நிலையத்தில் வைத்து கடந்த டிசெம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகளை மீறி ஈரானுக்கு தொலைத்தொடர்பு கருவிகளை வழங்கியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.


அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் 30 வருடங்களுக்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்படலாமென தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு, அவரை அமெரிக்காவிற்கு நாடு கடத்துமாறு அமெரிக்கா கோரி வரும் அதேவேளை, அவ்வாறு இடம்பெற்றால் கனடா கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடுமென சீனா எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## அமெரிக்காவில் அரசுத்துறைகள் முடக்கம்; ட்ரம்பிற்கு பாடகி லேடிகாகா கண்டனம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அரசுத்துறைகள் வழக்கம் போல் சீராக இயங்குவதற்கான சூழ்நிலையை ஜனாதிபதி ட்ரம்ப் கொண்டு வரவேண்டும் என ஹொலிவுட் பாடகி லேடி காகா வலியுறுத்தி உள்ளார்.





மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்பும் பிரச்சினை காரணமாக அமெரிக்காவில் பல்வேறு அரசுத்துறைகள் கடந்த 4 வாரங்களாக முடங்கி உள்ளன. இதனால் அரசு ஊழியர்கள் கடும் இன்னலுக்கு ஆளாகி உள்ளனர். இந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக ட்ரம்புக்கு கடும் கண்டனம் தெரிவித்த ஹொலிவுட் திரையுலகின் பிரபல பாடகி லேடி காகா, அரசுத்துறைகள் முடக்கத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரும்படி வலியுறுத்தி உள்ளார்.

இது பற்றி அவர் தெரிவிக்கையில், "அரசுத்துறைகள் வழக்கம் போல் சீராக இயங்குவதற்கான சூழ்நிலையை ஜனாதிபதி ட்ரம்ப் கொண்டு வரவேண்டும். ஏனெனில் வாரந்தோறும் கிடைக்கும் ஊதியத்தை நம்பித்தான் அரசு ஊழியர்களும், அவர்களின் குடும்பத்தினரும் பிழைத்து வருகிறார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## பனி வீழ்ச்சியாக மாறிய நயாகரா நீர்வீழ்ச்சி

(நியூயோர்க்)

வட அமெரிக்காவிலுள்ள புகழ்பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சி தற்போது உறைந்து பனி நீர் வீழ்ச்சியாகக் காணப்படுகின்றது.




வட அமெரிக்காவின் வட கிழக்குப் பகுதியிலுள்ள புகழ் மிக்க பேரருவி நயாகரா அருவி ஆகும். இது கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்துக்கும், அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்துக்கும் இடையேயான எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது.

இதன் இயற்கை அழகைக் காண ஆண்டுதோறும் 10 மில்லியன் மக்கள் வருகை தருகின்றனர். இது சுமார் 56 கி.மீ.நீளம் கொண்டது.

இந்நிலையில் அமெரிக்காவில் தொடர்ந்து நிலவும் குளிர்கால நிலை, காற்று, புயல் போன்ற சூழ்நிலைகள் இந்த வார இறுதியில், நயாகரா நீர்வீழ்ச்சி பனிவீழ்ச்சியாக மாறியுள்ளது.

இதன் விளைவாக நயாகரா நீர்வீழ்ச்சியில் ஒரு பனிச் சுவர் போன்ற அமைப்பு உருவானது. இதனையடுத்து பார்வையாளர்கள் நயாகரா நீர்வீழ்ச்சியின் அற்புத காட்சியினை படம் பிடித்து சமூக ஊடகங்களில் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து வருகின்றனர். (4-7)

## ...க ஆற்றில் நிலாத்தகடு



கூறுகையில், 'இந்த பனி தகடுகள் அரிதாகவும், இயற்கையாகவும் உள்ளது. இது கிட்டத்தட்ட 100 மீற்றர் அகலம் கொண்டது. மேலும் இது எதிர்க்கடிகார திசையில் சுழல்கிறது' என கூறினர்.

நதி செல்லும் வழியில், நீர் வெண்பனியாய் உறைந்து இருக்க, அதன் வழியாக சுழலும் நீரும் கண் கொள்ளாக் காட்சியாக உள்ளது. இது காண்போர் கண்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இவ்வழகைக் காண பலரும் உற்சாகத்துடன் வந்த வண்ணம் உள்ளனர். (4-7)

## சீனாவுடனான வர்த்தக முரண்பாடுகள் தீர்க்கப்படும்

### அமெரிக்க ஜனாதிபதி ஆலோசகர் உறுதி

(வோஷிங்டன்)

சீனாவிற்கு உதவுவதன் மூலம் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தக முரண்பாடுகள் தீர்த்துக்கொள்ளப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "அமெரிக்காவின் தீர்வை கட்டண ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக சீன பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலையில், இந்த வீழ்ச்சியிலிருந்து சீனாவை மேலெழச் செய்வதற்கு ஜனாதிபதி விரும்புகிறார். இந்நிலையில், இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருகிறது.

இதேவேளை, திறந்த பொருளாதார கொள்கையில் அமெரிக்காவை நாட்டிற்குள் அனுமதிக்க சீனா விரும்பினால், அங்கு ஏற்றுமதி விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடவும் அமெரிக்கா தயாராகவுள்ளது. இது நிச்சயமாக சீனப் பொருளாதாரத்திற்கு பயனளிக்கும் எனத் தெரிவித்தார்.

இவ்வாரம் முன்னெடுக்கப்படவிருந்த அமெரிக்காவுடனான சீன் வர்த்தக பேச்சுவார்த்தை ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்தினால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டது.

தற்போது சீன உயர் மட்ட அதிகாரிகளுடனான சந்திப்பிற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சீன துணை வர்த்தக அமைச்சர், துணை நிதியமைச்சர் ஆகியோருக்கும் அமெரிக்க உயரதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு இம்மாத இறுதித் தினங்களில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## கஞ்சா கடத்தல்காரர்களால்

# உயிர் அச்சுறுத்தல்; எனது துப்பாக்கியை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும்

## புஞ்சிநிலமே எம்.பி. எச்சரிக்கை



(கொழும்பு)

எனக்கும் எனது குடும்பத்திற்கும் ஒரு சில கஞ்சா கடத்தல்காரர்களால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது. எனவே என்னுடைய பாதுகாப்பிற்காகவும், எனது குடும்பத்தின் பாதுகாப்பிற்காகவும் எனது துப்பாக்கியைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே நாடாளுமன்றத்தில் எச்சரித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் தனக்கு எவ்விதமான அச்சுறுத்தலும் இல்லை.

எனினும் சிங்கள மக்கள் சிறுபான்மையினமாக வாழ்கின்ற பகுதியில் சிங்கள மக்களால் எனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்புரிமை பிரச்சினையொன்றை எழுப்பிக் கருத்துரைத்த அவர்,

தன்னைக் கொல்வதற்கு முயன்ற நபர் திருகோணமலை பிரதேசத்தில் கஞ்சா விற்பனையில் ஈடுபடும் நபர். அவரின் மூலமாக எனக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் நிலவி வருகின்றது.

அந்த அச்சுறுத்தலின் பின்னால் அரசியல் இல்லை. அவர் ஐக்கிய தேசியக் கட்சியோ, சுதந்திரக் கட்சியோ, ஜே.வி.பியோ அல்லது முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய எந்தவொரு கட்சியையும் சேர்ந்தவரில்லை.

எனக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக சேவையை முன்னெடுப்பதற்குச் செல்லும் போது எனக்கோ அல்லது என்னுடைய மனைவி உள்ளிட்ட குடும்பத்தினருக்கோ அல்லது என்னுடைய பாதுகாப்பு அதிகாரிகளின் உயிருக்கோ அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

அவ்வாறான நிலைமையொன்று ஏற்படக்கூடுமாயின் எனக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ துப்பாக்கியைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை உருவாகும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தபாயவுக்கு எதிரான வழக்கின் போது அளவுக்கதிகமான அதிரடிப்படையினர் குவிப்பு

## நீதிபதிகளிடம் முறைப்பாடு



(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கொழும்பு சிறப்பு மேல்நீதிமன்ற வளாகத்தில் அளவுக்கு அதிகமான அதிரடிப்படையினர் காணப்பட்டமைக்கு சட்டமா அதிபர் தரப்பில் முன்னிலையான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீபா பீரிஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

டி.ஏ.ராஜபக்ஷ நினைவிடம் அமைத்ததில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பாக, கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு சிறப்பு மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் கோத்தபாய ராஜபக்ஷ முன்னிலையாகியிருந்தார். இதன்போது அளவுக்கு அதிகமான சிறப்பு அதிரடிப்படையினர் நீதிமன்ற வளாகத்தில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதையடுத்து, வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போது, சட்டமா அதிபர் தரப்பில் முன்னிலையான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீபா பீரிஸ் பெருமளவு படையினர் நீதிமன்ற வளாகத்தில் குவிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் சாட்சிகள் அச்சம் கொள்வார்கள் என்றும் நீதிபதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள், சாதாரண உடையில் பாதுகாப்பு வழங்க முடியும் என்ற போதும் அதிகளவிலான அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருப்பது சாட்சிகளை அச்சுறுத்தும் உளவியல் ரீதியான ஒரு தாக்குதல் நடவடிக்கை என்று அரச தரப்பு சட்டவாளர் முறையிட்டார். இதையடுத்து, அடுத்த விசாரணையின் போது இந்த விடயத்தைக் கவனத்தில் கொள்வதாக நீதிபதிகள் தெரிவித்தனர். (இ-7)

# தூபி மீது ஏறி புகைப்படங்கள் எடுத்தவர்கள் மீது நடவடிக்கை



(அநுராதபுரம்)

வரலாற்று தொன்மைமிக்க, அநுராதபுரத்தில் அமைந்துள்ள பபலு வெஹெர தூபி மீது ஏறி நின்று புகைப்படங்களை எடுத்து, அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்த சில இளைஞர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த புகைப்படங்கள் பேஸ்புக் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் பல்கலைக் கழக மாணவர்கள் என்றும் கண்டறியப்பட்டுள்ளனர்.

மேலும் வரலாற்று சிறப்புமிக்கதும் சமய ஸ்தலமாகவும் கருதப்படும் குறித்த தூபியை அவமதிப்புக்குள்ளாக்கியுள்ள இந்த மாணவர்கள் மீது, சமூக வலைத்தளங்களில் பாரியளவில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டும் விமர்சனங்களுக்குள்ளாக்கப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பதவியேற்பு



(கொழும்பு)

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் எப்.சி.ராகல் நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் புதிய துணைவேந்தருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், வளாக முதல்வர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர். (இ-9)

# சுதந்திரதின ஒத்திகைக்காக காலி வீதியின் ஒருபகுதி மூடல்

(கொழும்பு)

71 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் சில தினங்களுக்கு கொழும்பில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து லோட்டஸ் சுற்றுவட்டம் வரையான பகுதியிலேயே விசேட போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி நாளை மறுதினம் 26 ஆம் திகதியும் மறுநாள் 27 மற்றும் 31 ஆம் திகதிகளிலும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் 3 ஆம் திகதி வரையில் காலை 6.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30 வரையில் குறித்த வீதி தற்காலிகமாக மூடப்படவுள்ளது.

சுதந்திரதின ஒத்திகை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகல் குறித்த காலப்பகுதியில் அந்த வீதி தற்காலிகமாக மூடப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பட்டினி பயன் தரும்

சேர்! சாப்பிடாமல் இருந்து பாருங்கள்! அதனால் கிடைக்கும் சௌகரியம் நிறைய இருக்கிறது! நமக்கு தெரிந்தும்தெரியாமலும் நமதுஉடம்புக்குள்ளேஎவ்வளவோ கோளாறுகள் இருக்கலாம். எல்லாத்தையும் செலவு இல்லாமல் சரிசெய்வதற்கு ஒரு சிறந்த வழி சாப்பிடாமல் இருப்பது தான். உடம்பில் உண்டாகக்கூடிய நோய் சுகக்கேடு இதையெல்லாம் இயற்கையாகவேஜீவ அணுக்கள் சரி செய்துவிடுகிறதாம்! உண்ணா நோன்பு என்பது உடற்கூறு ரீதியான ஓய்வு என்று சொல்கிறார்கள். இது நோயைக் குணப்படுத்துகிறது.

அதுமட்டுமல்ல! நோய் வராமலும் தடுக்கிறது! சாப்பிடாமல் இருந்துதான் பிரார்த்தனை, தியானம் இது எல்லாம் செய்வார்கள். இது வெறும் தெய்வீகம் மட்டுமில்லை. விஞ்ஞானம் கலந்த தெய்வீகம்.

சாப்பிட்டுவிட்டு தியானம் செய்கிறேன்... பிரார்த்தனை செய்கிறேன் என்று ஆரம்பித்தால்... உங்களுக்குத் தெய்வீக சிந்தனை வராது! தூக்கம் தான் வரும்! தூங்கி முழிப்பீர்கள்! மறுபடியும் சாப்பிடலாமா? என்று தோன்றும்!

உடம்பில்உண்டாகும் தேவையில்லாத கழிவுப் பொருள் நீங்குவதற்கு "பட்டினி" அவசியம். இயற்கை வைத்தியத்தில் உண்ணாநோன்பு ஒரு முக்கியமான சிகிச்சை. உண்ணா நோன்பு எப்போது இருக்கிறது? எப்படி இருக்கிறது? அது நோயினுடைய தன்மையைப் பொறுத்தது.

சரி சாப்பிடாமல் இருப்பதற்கு நான் தயார் என்று துணிச்சலாகக் கையைத் தூக்குகிறவர்கள் மட்டும் முன்னால் வாருங்கள்... நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்டுக் கொள்ளுங்கள்... எப்போது ஆரம்பிப்பது? எப்போது முடிப்பது? இதைப் பற்றி நீங்கள் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும்.

குளிர் காலத்தில் இது வேண்டாம். உடம்பில் போதுமான தெம்பு இல்லையா? அப்படி என்றால் இது உங்களுக்கு வேண்டாம். நீங்கள் பட்டினி இருந்து ஏற்கனவே இருந்த கொஞ்ச நஞ்ச தெம்பையும் விட்டுவிட்டு என்னிடம் சண்டைக்கு வருவீர்கள்! நரம்புத் தளர்ச்சி, பயந்த சுபாவம், கோபதாபம் அதிகமாக உள்ளவர்கள் இவர்கள் எல்லாம் விலகிக்கொள்ளுங்கள். உங்களுக்கும் இது வேண்டாம்...

முதல் தடவையாக உண்ணாவிரதம் இருக்கப்போகிறீர்களா? அப்படி என்றால் நீங்கள் ஒரு வரைமுறையை வைத்துக்கொள்ளுங்கள்! வாரத்துக்கு ஒரு நாள் சாப்பாட்டை நிறுத்துங்கள்... அதற்குப் பதிலாகப் பழச்சாறு மட்டும் குடியுங்கள்! முதலில் காலை உணவைக் கைவிடுங்கள்! அதற்குப் பின் மதிய உணவை நிறுத்துங்கள்! அதற்குப் பின் பழச்சாறு மட்டும் குடித்துவிட்டு ஒருநாள் பூராகவும் சாப்பிடாமல் இருங்கள்! இப்படி படிப்படியாக வரவேண்டும்!

சாப்பிடாமல் இருக்கும் சமயத்தில் நீங்கள் எப்படி இருக்க வேணடும் தெரியுமா? அதிர்ச்சி, ஆரவாரம் இது எல்லாம் கூடாது. அமைதியான சூழ்நிலை வேண்டும். நல்ல காற்றோட்டம் வேண்டும். அதிக ஈரமான அல்லது அதிக வெதுவெதுப்பு அளிக்கக் கூடிய ஆடைகளை அணியக்கூடாது. சுத்தமான குடிநீர் பருக வேண்டும்! மனதில் நல்ல நம்பிக்கையும் பூரண ஓய்வும் மிகவும் முக்கியம். உண்ணா விரதத்துக்கு முன்பும் பின்பும் ஒரு வார காலத்துக்குக் கெட்ட பழக்க வழக்கம் எதுவும் இருக்கக் கூடாது. உண்ணாவிரதத்தை முடிக்கும்போது பழச்சாறு, இளநீர் இப்படி ஏதாவது குடித்து அதை முடிக்க வேண்டும். உண்ணாவிரதம் இருக்கும்போது உங்கள் உடம்பில் சில அறிகுறிகள் தெரியலாம். தலைச்சுற்றல், தலை வலி, பலவீனம், இதய படபடப்பு, நாக்கில் மாவு படிவது, ருசி இல்லாமல் போவது இதுபோல் அறிகுறிகள் இருக் கலாம். அதற்காகக் கவலைப்பட வேண்டாம். உடம்பு வெப்பநிலை, நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் இது எல்லாம் வித்தியாசமாக இருக்கலாம்.

இயற்கை வைத்தியம் என்ன சொல்லுகிறது என்றால்... உடம்பில்சேர்ந்த நச்சுக்கழிவுகள் எல்லாம் உண்ணா நோன்பு காலத்தில் வெளியேற்றப்படும். உடல் பருமனைக் குறைப்பதற்கு உண்ணா நோன்பும் உணவுக் கட்டுப்பாடும் ஒரு நல்ல வழி.

இடைவெளி விட்டு இருக்கும் விரதத்தினால் உடம்புக்குப் புது உற்சாகம் ஏற்படுகிறது... எடை குறைகிறது. உண்ணாவிரதத்தினால் என்ன சௌகரியம் தெரியுமா? உடல் உறுப்புகளுக்கு ஓய்வு கிடைக்கிறது! உடம்பில் சேர்ந்த நச்சுப்பொருளும், கெடுதல் செய்யும் பக்ரீறியாப் பொருள்களும் வெளியேறுகிறது!

நோய்க்கு இது ஒரு நல்ல சிகிச்சை, மனநோயைக் கூட இது கட்டுப்படுத்துகிறது. புகையிலை, போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து விடுபட இது உதவியாக இருக்கிறது! உடை குறைகிறது! தோற்றப் பொலிவு கிடைக்கிறது! உற்சாகம் வருகிறது! ஐம்புலன்களுக்கும் புத்துணர்ச்சி கிடைக்கிறது! அதனால்... சாப்பிடாமல் இருப்பதற்கு யார் எல்லாம் தயார்! முன்னால் வாருங்கள் பார்க்கலாம்! என்ன சேர் இது? எல்லோரும் போய் விட்டீர்கள்! இங்கே நான் மட்டும் தனியாக நின்று கத்திக் கொண்டிருக்க வேண்டியதுதானா? என்ன இது? கத்திக் கத்தி எனக்கும் பசி எடுக்கிறது மாதிரி இருக்கிறது!

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

152



“வீதிகள், போக்குவரத்து என்பவை திருத்தமடைந்தமையாலும் முன்னரைவிட இப்போது கிறிஸ்தவர்கள் இந்த இடங்களுக்குச் செல்லக்கூடியதாகவும் இருந்தது. பொருளாதார வளர்ச்சி, கட்டுப்பாடற்ற சந்தை முறைமையின் விருத்தி, விவசாயச் செயற்பாடுகள் என்பவற்றுடன் ஆசிரியர்கள், லிகிதர்கள், சிவில் அதிகாரிகள் போன்ற பதவிகளுக்கான அரசாங்க வேலை வாய்ப்புக்கள், யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் குறைந்த அளவில் காணப்பட்ட நிலம் காரணமாக தீபகற்பத்து மக்களை நிலமும் நிர்வாகமும் அதிகமாகவும் மக்கள் தொகை குறைவாகவும் இருந்த இந்தப் பிரதேசங்களுக்குக் குடிபெயரச் செய்திருந்தன”

### தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து பெரும்பாலும் சைவ உயர் மட்டத்தினரின் மத, மொழி, பண்பாட்டு விழிப்புணர்வுக்குப் பதில் செயலாக புரட்டஸ்தாந்து மிஷனரிமாரின் செயற்பாடுகளும் அதிகரித்தன.

மொழி, சமய, பண்பாட்டுச் செயற்பாடுகளை விருத்திச் செய்யச் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் உருவாக ஆரம்பித்ததுடன் உள்ளூர் மக்களை மதமாற்றும் முயற்சிகளை முளையிலேயே கிள்ளவும் அவற்றுக்கு எதிராகப் போராடவும் கிறிஸ்தவ எதிர்ப்பு உணர்வுகள் எழுந்தன.

ஆயினும் இந்த நடவடிக்கைகள் கிறிஸ்தவ மிஷனரிமாரை மேலும் முனைப்பாக இயங்குவதற்குத் தூண்டவே யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் வன்னிப் பெருநிலத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மேலும் கிறிஸ்தவ நிலையங்கள் அமைக்கப்பட்டன.

சைவமக்களைக் கிறிஸ்தவத்திற்கு மாற்றப் பிரசாரங்கள் நடத்தப்பட்டதுடன் மிஷனரிமார் சைவசமயத்தையும் அதன் அனுட்டானத்தையும் வெளிப்படையாகக் கண்டனஞ்செய்து குற்றங்காணவும் செய்தனர்.

வன்னிப் பெருநிலத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்ட கிறிஸ்தவச் செயற்பாடுகள் இவ்வாறு கூறப்படுவதற்கு ஆதாரமாயுள்ளன.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து நடுப்பகுதி வரையிலுமான கிறிஸ்தவ மிஷனரிமாரின் முயற்சிகள் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எதிர்ப்பு அதிகரித்தபோது அவர்கள் தமது மத, கல்விச் செயற்பாடுகளை வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் மேலும் விரிவாக்கம் செய்தனர்.

அவர்கள் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் தீபகற்பத்தில் நன்றாக நிலை கொண்டிருந்ததனால் இவ்வாறு செய்திருக்கக் கூடும்.

அதேசமயம் இச்செயல் சைவ மறுமலர்ச்சியாளர்களினதும் கிறிஸ்தவ எதிர்ப்பினதும் போராட்டங்கள் காரணமாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

வீதிகள், போக்குவரத்து என்பவை திருத்தமடைந்தமையாலும் முன்னரைவிட இப்போது கிறிஸ்தவர்கள் இந்த இடங்களுக்குச் செல்லக் கூடியதாகவும் இருந்தது.

பொருளாதார வளர்ச்சி, கட்டுப்பாடற்ற சந்தை முறைமையின் விருத்தி, விவசாயச் செயற்பாடுகள் என்பவற்றுடன் ஆசிரியர்கள், லிகிதர்கள், சிவில் அதிகாரிகள் போன்ற பதவிகளுக்கான அரசாங்க வேலை வாய்ப்புக்கள், யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் குறைந்த அளவில் காணப்பட்ட நிலம் காரணமாக தீபகற்பத்து மக்களை நிலமும் நிர்வாகமும் அதிகமாகவும் மக்கள் தொகை குறைவாகவும் இருந்த இந்தப் பிரதேசங்களுக்குக் குடிபெயரச் செய்திருந்தன.

தமிழர், முஸ்லிம்கள், இந்திய வியாபாரிகள் ஆகியோரின் வருகையினால் இப்பிரதேசங்களின் மக்கள் தொகை மேலும் அதிகரித்தது.

இதனால் இது வரையில் கவனிக்கப்படாததும் அதிக விருத்தியடையாமலும் இருந்த இந்த மாவட்டங்களில் கிறிஸ்தவ மிஷனரிமார் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முனைந்தனர்.

இந்தத் தொலைதூர இடங்களில் சைவமறுமலர்ச்சியின் தாக்கம் இருக்காதெனவும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் தாங்கள் முகங்கொடுக்க வேண்டியிருந்த தடைகளின்றி இங்கு உள்ளூர் வாசிகள் மத்தியில் தமது பணியைச் செய்யலாம் என்றும் கிறிஸ்தவர்கள் எண்ணியிருக்கலாம்.

எனவே பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியில் வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் கிறிஸ்தவ மதமும் கல்வியும் செல்வாக்குப் பெற்றன.

தமது மதச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான இந்த மிஷனரிமாரின் முயற்சியை இங்கு சித்திரிப்பது பொருத்தமாகும். ஏனெனில் இவர்களது இந்த முயற்சியே இவர்கள் இந்தப் பிரதேசங்களில் மேற்கொண்ட மதப்பரப்பலுக்கு எதிராக சைவ மறுமலர்ச்சியாளரைத் தூண்டியது.

தமது மக்கள் மதம் மாற்றப்படுவதைத் தடுப்பதற்கும் தமது சமயம், பண்பாடு என்பவற்றை மேலும் பாதுகாக்கவும் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர் எவ்வாறு கிறிஸ்தவ மிஷனரிமாரின் செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்தனர் என்பதையும் விளங்கிக் கொள்ள முடியும்.

அத்துடன் ஒரு பொது நலனைப் பாதுகாக்கும் முயற்சியின் பயனாக எவ்வாறு தமிழர் ஓர் ஒன்றிணைந்த சமூகமாகினர் என்பதையும் காட்டும்.

#### வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் கிறிஸ்தவ மிஷனரி மாரும் தமிழரும்

வன்னி மாவட்டத்து மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுவதை திருச்சபை மிஷனரிச் சங்கம் (Church Missionary Society- CMS) ஒரு விசேட திட்டமாக்கியது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் குறிப்பாக நல்லூர், சுண்டுக்குளி, கோப்பாய், கொக்குவில், பளை (முன்னைய அத்தியாயத்தில் விளக்கப்பட்டது போன்று) ஆகிய இடங்களில் தமது செயற்பாடுகளை நிலைப்படுத்திக் கொண்ட திருச்சபை மிஷனரிச் சங்கம், வன்னிப் பிரதேசத்தில் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது.

(தொடரும்)

# மடு பிரதேச செயலக வாயிலை மூடி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

## பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு





(மன்னார்)

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் உள்ள பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கோரி மடு பிரதேச கிராமிய அமைப்புக்கள் மற்றும் கிராம மக்கள் இணைந்து நேற்று புதன் கிழமை காலை மடு பிரதேச செயலக நுழைவாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மடு பிரதேச கிராம மட்ட அமைப்புக்களின் ஏற்பாட்டில் மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் அனுசரணையில் குறித்த அமைதி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

இதன் போது மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 76 கிராமங்களைச் சேர்ந்த 25 கிராம மட்ட அமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நேற்றுக் காலை 8 மணியளவில் மடு பிரதேச செயலகத்திற்கு முன் ஒன்று கூடியதோடு, மடு பிரதேச செயலகத்தினுள் எவரையும் செல்ல விடாது கதவை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வீதிகள், உள்ளக வீதிகள் செப்பனிடப்படாமை, வீதி மின் விளக்குகள் பொருத்தாமை, குடிநீர் வசதிகள் இன்மை, உரிய போக்குவரத்து சேவைகள் இல்லாமை, மருத்துவ சேவைகள் இல்லாமை, கசிப்பு உற்பத்தியை உடன் நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, வளங்கள் சுரண்டப்படுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் போராட்டத்தில் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்ற போது கூட மரியாதையாக நடத்தப்பட்டோம். ஆனால் பிறந்து வளர்ந்த எமது பிரதேசத்தில் அந்த மரியாதை இல்லை எனவும் அரசியல் வாதிகள் வாக்குக் கேட்டு மட்டுமே வருகின்றார்கள். எனவே மக்களின் தேவைகளை அறிந்து அடுத்த தேர்தலுக்கு முன்னதாக எமது கோரிக்கைகளை நிறைவேற்றிதருமாறு கோரிக்கை விடுத்தனர்.

பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கும் வகையில் மடு பிரதேச செயலாளர் ஜெயகரனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் சர்வமத தலைவர்கள், மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீண்ட நேரம் காத்திருந்த நிலையில் மடு பிரதேச செயலகத்தில் இடம் பெற இருந்த வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்விற்கு அமைச்சர் மனோ கணேசன் மற்றும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வருகை தந்த போது நுழைவு வாயிலில் மறித்து தமது பிரச்சினைகள் தொடர்பில் தெரிவித்ததோடு, கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

மக்களின் பிரச்சினைகளை நேரடியாக கேட்டு அறிந்து கொண்ட அமைச்சர் மனோகணேசன் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தான் உடனடியாக கவனம் செலுத்தி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாக உறுதியளித்தார்.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (2-285)

# நுணாவில் வீரபத்திரர் ஆலய மணவாளக்கோல உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய மணவாளக்கோல உற்சவம் நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (இ-29)

# இரண்டு நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் எழுத்தாளரும் மருத்துவருமான நடேசனின் "எக்ஸைல்" (ஈழப்போராட்ட கால அனுபவங்களின் தொகுப்பு) வெளியீடும் "கானல் தேசம்" (நாவல்) அறிமுகமும் நாளை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் நகரிலுள்ள றிம்மர் மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறை விரிவுரையாளர் மகேந்திரன் திருவரங்கன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் விமர்சன வுரைகளை ஊடகவியலாளர் பூபாலரட்ணம் சீவகன், கிரிஷாந், யதார்த்தன், எழுத்தாளரும் திரைப்பட இயக்குநருமான ஹஸீன் ஆகியோர் ஆற்றுவர். (இ-7)

# சித்தி விநாயகர் தேவஸ்தான மணவாளக் கோல விழா

வடமராட்சி, தம்பசிட்டி, மாயக்கை சித்தி விநாயகர் தேஸ்தான நான்காம் ஆண்டு மணவாளக் கோல விழா, (1008) நவோத்தர சகஸ்ர மஹா சங்காபிஷேகம் நாளை மறுதினம் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும். (இ-5)

# போதைப்பொருள் ஒழிப்பு துண்டுப்பிரசுர விநியோகம்



(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வடமராட்சியில் நேற்று துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

யாழ்.வதிரி இருதயச் கல்லூரி அதிபர் இராகவன் தலைமையில் இடம்பெற்ற போதைப் பொருள் ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் ஆசிரியர்களும் மாணவர்களும் வீதியால் பயணித்த பொது மக்களுக்கு இந்தத் துண்டுப்பிரசுரங்களை வழங்கினர். (இ-5-60)

# ஜயகரன் கதைகள் வெளியீடும் "காலம்" 52வது இதழ் மதிப்பீடும்

பா.அ.ஜயகரன் கதைகள் வெளியீடும் "காலம்" 52 ஆவது இதழ் மதிப்பீடும் "காலம்" ஆசிரியர் செல்வத்துடனான சந்திப்பும் எதிர் வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குத் தெரு இல.121 இல் அ.யேசுராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் பா.அ.ஜயகரன் கதைகளின் மதிப்புரையை கலாநிதி சு.குணேஸ்வரனும் "காலம்" இதழின் மதிப்புரையை த.அஜந்தகுமாரும் வழங்கவுள்ளனர். (இ-5)

# செவிப்புலனற்றோர் நிறுவன 10வது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பொதுக் கூட்டமும் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நிறுவன மண்டபத்தில் (23, ஆச்சிரம வீதி, வதிரி, கரவெட்டி) நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் கலந்து கொள்வார். பொதுக் கூட்டம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். (இ-5)

# 'அபிவிருத்திப் பணிகளிலிருந்து சுதந்திரக்கட்சி விலகவில்லை'

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திப் பணிகளிலிருந்து விலகவில்லை; நகரசபையின் உப குழுக்களிலிருந்தே விலகினோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சியின் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் நகரசபையின் அபிவிருத்திப் பணிகளிலிருந்து விலகியிருப்பதாக ஒரு சில ஊடகங்கள் தெரிவித்திருந்தன. நாம் ஒரு போதும் நகரின் அபிவிருத்திப் பணிகளில் இருந்து விலகிக் கொள்ளவில்லை. சபையின் செயற்பாடுகளுக்கும், மக்களின் நலனுக்கும் பங்கம் ஏற்பட்டால் எதிர்க்கட்சியாகச் செயற்படுவோம் என்றே தெரிவித்திருந்தோம்.

அதனை விட சாவகச்சேரி நகரசபை உறுப்பினராகவும், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடாகவும் தொடர்ந்தும் மக்கள் பணியாற்றுவோம் எனத் தெரிவித்தார். சாவகச்சேரி நகரசபையின் இரண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் நகரசபையின் உப குழுக்களிலிருந்து விலகியுள்ள அதே வேளை சாவகச்சேரி பிரதேசசபையின் மூன்று சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் அதிரடியாகச் சபையின் உப குழுக்களிலிருந்து விலகியுள்ளனர்.

சபை ஆரம் பித்து ஒரு வருடம் கடந்தும் இன்னும் உப குழுக் கூட்டங்கள் நடைபெறவில்லை எனவும், உப குழுக்களிலிருந்தும் எந்தப் பிரயோசனமும் இல்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-30)

# சனசமூக நிலையத்தின் 40வது ஆண்டு விழா

(சாவகச்சேரி)

கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 40 ஆவது ஆண்டு விழா நாளை மறுதினம் 26 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நிலையத் தலைவர் அ.சந்திரலிங்கம் தலைமையில் உதயசூரியன் திறந்தவெளி அரங்கில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை முன்னாள் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன் மற்றும் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (இ-30)



தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைக்கல்விப் பிரிவு, தமிழ் இணையக் கல்விக்கழக புதுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வராசா கஜானன் தலைமையில் இந்த நிகழ்வு மீசாலையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் சிரேஷ்ட விரிவுரையாளர் க.ரஜனிகாந்தன், கற்கை நெறியின் இணை- இணைப்பாளர் திருமதி துஷ்யந்தகுமாரி ரஜனிகாந்தன், விரிவுரையாளர் இளந்திரயன், விரிவுரையாளர் க.முருகதாஸ் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:- சுபேசன்)



யாழ்ப்பாணம் சின்னக்கடை வீதி குண்டும் குழியுமாக மக்கள் நடமாட முடியாமலும் வாகனங்கள் போக்குவரத்து செய்ய முடியாமலும் வீதியின் நடுவே வாய்க்கால் உடைந்து வாகனங்கள் விபத்து ஏற்படக் கூடியதாகவும் காணப்படுகின்றது. இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டபோதும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதுள்ளதாக வியாபாரிகளும் அப்பிரதேச மக்களும் கவலை வெளியிட்டுள்ளனர். (படங்கள்:குருநகர் செய்தியாளர்)

# துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதியின் அனுமதியுடன் கையெழுத்து சேகரிப்பு

## இது போதையை ஒழிக்கும் அவரது கொள்கைக்கு முரணான செயல் என ஹிருணிகா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதியின் அனுமதியுடன் கொழும்பு மாவட்டத்தில் கையெழுத்து சேகரிக்கப்பட்டு வருகின்றது. ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை போதையை ஒழிக்கும் அவரது கொள்கைக்கு முரணானதாகும் என ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர சுட்டிக்காட்டியுள்ளார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றவிசாரணை ஆணைக் குழுக்கள் (திருத்தச்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்.

கொலைக்குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவுக்கு எதிர் வரும் சுதந்திர தினத்தில் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்காக ஜனாதிபதியின் அறிவுறுத்தலுடன் கொலன்னாவை உட்பட கொழும்பு மாவட்டத்தின் மக்களிடம் கையெழுத்து சேகரிக்கப்பட்டுவருவதாக சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான சாட்சிகளும் என்னிடம் இருக்கின்றன.

அத்துடன் துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்குவதில் எனக்கு தனிப்பட்ட பிரச்சினை எதுவும் இல்லை. அவர் எனது தந்தையை கொலை செய்தார் என்பது உறுதிப்படுத்தப்பட்டு அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது.

எனது போராட்டமும் அதுவாகவே இருந்தது. அவருக்கு தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் நாட்டில் நீதிமன்ற சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் எனது கடமை முடிந்தது.

ஆனால் நாட்டில் போதைப் பொருள் கடத்தலில் பிரதானமாக இருக்கும் துமிந்த சில்வா போன்றவர்களுக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்புவழங்கப்பட்டால் எதிர்காலத்தில் சிறைச்சாலைகளில் இருக்கும் ஏனைய கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்குமாறு கோரிக்கை முன் வைக்கப்படும்.

இது எதிர்காலத்தில் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும். ஜனாதிபதி தனக்கிருக்கும் அதிகாரத்தை தனது சுய நலனுக்காக பயன்படுத்தக் கூடாது.

மேலும் ஜனாதிபதி மீது எங்களுக்கு நம்பிக்கை இருந்தமையாலே அவரை ஜனாதிபதியாக்க நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். ஆனால் அவர் கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி மேற்கொண்ட அரசியல் சூழ்ச்சிக்கு பின்னர் அவர் மீது எந்த நம்பிக்கையும் இல்லை.

அரசியலமைப்புக்கு எதிராக செயற்பட்ட ஜனாதிபதி. துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பளிக்க நடவடிக்கை எடுக்க மாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

நாட்டில் போதைப்பொருளை ஒழிக்க எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ள பின்வாங்கப்போவதில்லை என தெரிவிக்கும் ஜனாதிபதி தற்போது அவரது கொள்கைக்குமுரணாக செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்ற பேராசையிலேயே அவர் தற்போது அவரது கொள்கைக்கு முரணாக செயற்பட்டு வருகின்றார். அதனால்தான் தனது எதிரியாக தெரிவித்து வந்த மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கினார் என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)





**யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து போதைப்பொருளுக்கெதிரான பேரணியை நேற்றுக்காலை நடத்தினர். இப் பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் போதைப்பொருட்களுக்கு எதிரான சுலோக அட்டைகளை தாங்கியிருந்தனர். இப்பேரணி மானிப்பாய் பொதுச் சந்தைக்கு முன்பாக ஆரம்பித்து மானிப்பாய் பிரதான வீதியூடாக சென்று பாடசாலையில் பொதுக்கூட்டத்துடன் நிறைவடைந்தது.**

(படங்கள்:- பொற்பதி செய்தியாளர்)


LOLC ரன் சவி

தங்கக்கடன்களை பெற்றுக்கொள்ளும் போது

நிம்மதியும் வெகுமதியும்



LOLC ரன்சவி தங்கக்கடனை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வேளையும் கெப், குடை, ஆபரணப் பை மற்றும் மேலும் பல பரிசுப்பொருட்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இலங்கையில் முதன்முறையாக தங்கக்கடனுக்கான ஆயுட் காப்புறுதி எதிர்பாராத அசம்பாவித சூழ்நிலையின் போது கடன் தள்ளுபடி செய்யப்பட்டு தங்கப் பொருளை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி - 0115 880 400

LOLC பினான்ஸ்




JITF 2019



INSEE சங்ஸ்தா சீமெந்து

INSEE MAHAWELI MARINE PLUS மகாவலி மெரின் பிளஸ்

# வீட்டுத்திட்டம் நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு; ஐந்து கிராமங்களின் மக்கள் ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

வவுனியா நேரியகுளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள ஐந்து கிராம மக்கள் தமக்கு வழங் கப்பட்ட வீடுகளை நிறுத்தியமை க்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

நேரியகுளம், இலுப்பைக் குளம், வேப்பங்குளம், அழகாபுரி, அடம்பன்குளம் ஆகிய ஐந்து கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு மீள் குடியேற்ற அமைச்சினால் 40 வீடுகள் வழங்கப்பட்டு பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இவ்வீட்டுத்திட்டம் வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலகத்தினால் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

பத்து இலட்சம் ரூபா பெறுமதியான இவ்வீட்டுத்திட்டம் எதுவித அறிவித்தலும் இன்றி நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் வவுனியா வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் குடிசை வீடா, நிரந்தர வீடா தீர்மானிப்பது அரச அதிகாரியே, வழங்கிய வீட்டை மீண்டும் தா போன்ற பல்வேறு பதாகைகளை தாங்கியிருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வந்த உதவி பிரதேச செயலாளர் முகுந்தன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் இப்பிரச்சினை தொடர்பாக கேட்டறிந்தார். மேலும் இது தொடர்பாக உதவி பிரதேச செயலாளர் முகுந்தன் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தெரிவிக்கையில்,

தற்போது மீள்குடியேற்ற அமைச்சினால் 330 ஆக இருந்த எண்ணிக்கை 150 ஆக குறைக்கப்பட்டது. இதன் காரணமாக கூடுதலாக வீடுகள் தெரிவு செய்யப்பட்ட மூன்று கிராம சேவகர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட வீடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஏனைய குறைவான எண்ணிக்கையில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கி றோம். இதன் அடிப்படையில் 40 வீடுகள் வழங்கிய நேரியகுளம் கிராமசேவகர் பிரிவிற்கான வீட்டுத்திட்டம் நிறுத்தப்பட்டது என தெரிவித்தார்.

இருந்த போதும் ஆர்ப்பாட்டக்காரர்களின் வேண்டுகோளுக்கு அமைய முதற்கட்டமாக 10 வீடுகள் வழங்குவதாகவும் மிகுதி வீடுகளை அடுத்த வீட்டுத்திட்டத்தில் ஏனையவர்களிற்கு வழங்குவதாகவும் தெரிவித்ததன் அடிப்படையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (2-250)

# சமூக சேவையாளருக்கான பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சி.சி.எச் (Centre for Children's happiness) நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் இரண்டு நாட்களைக் கொண்ட சமூக சேவை பயிற்சி முகாம் இன்றும் நாளையும் வளலாய் கிராமத்தில் இடம்பெறும்.

இப்பயிற்சி நெறியில் சி.சி.எச். நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மாணவர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் எனப்பலரும் கலந்து கொள்வர்.

இச் சமூக சேவை பயிற்சி முகாமில் பல தரப்பட்ட சமூக அபிவிருத்தி சார் செயற்பாடுகள் இடம்பெறும்.

இப் பயிற்சி முகாமிற்கு விருந்தினர்களாக வளலாய் கிராம அலுவலகர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், வளலாய் அ.மி. த.க பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்து கொள்வர்.

இச் சமூக சேவை பயிற்சி முகாமிற்கு வளவாளராக இந்தியா ராஜீவ்காந்தி இளைஞர் வலுவூட்டல் தேசிய நிறுவனத்திலிருந்து வருகை தந்த நிறாச் கலந்து கொள்வார்.

அத்துடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் சிறந்த சமூக சேவகருக்கான விருதும் வழங்கப்படவுள்ளது. (இ

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரியால் நடத்தப்படும் பிரதான பாடங்களான வாய்ப்பாட்டு,நடனம் ,வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், ஓர்கன், கிற்றார்,ட்றம்,ஒக்ரோபாட், சித்திரம்,நாடகமும் அரங்கியலும் சிறப்புப் பாடங்களான கூத்து, கண்டிய நடனம், யோகாசனம், அழகுக் கலை, பண்பாடு துணைப் பாடங்களான ஆங்கிலம் போன்ற பாடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பாடங்களைப்பயில விரும்புவோர் கிளை இல.15, றக்காவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இக்கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களை பெற்று நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

# இளம் பிக்குவை கடுமையாக தாக்கிய சிரேஷ்ட பிக்கு மூடிமறைத்த பொலிஸார்- பிரதேச மக்கள் அதிருப்தி

(காலி)

இளம் பிக்கு ஒருவர், சிரேஷ்ட பிக்கு ஒருவரால் கடுமையாக தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் காலிஅஹூன் கல்ல, கெகரிவத்த பகுதியில் இடம்பெற்றதோடு பிரதேச மக்களிடத்திலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அஹூன்கல்ல, கெகரிவத்த பகுதியில் அமைந்துள்ள விகாரை ஒன்றில் உள்ள சிரேஷ்ட பிக்கு ஒருவர் அங்கிருந்த இளம் பிக்கு ஒருவரை கடுமையாக தாக்கியுள்ளார்.

இதனை அறிந்த பிரதேச மக்கள் உடனடியாக 119 என்ற பொலிஸாரின் அவசர தொலைபேசி பிரிவுக்கு தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சிறுவனான பிக்குவை மீட்டு பலபிட்டி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இளம் பிக்குவின் உடலில் பெல்ட் மற்றும் வயர்களை கொண்டு தாக்கிய அடையாளங்கள் இருந்துள்ளன.

எனினும் சிறுவன் பிக்குவை தாக்கிய சிரேஷ்ட பிக்குவை ஏன் பொலிஸார் கைது செய்யவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த சம்பவத்தை மூடிமறைக்குமாறு விகாரையில் உள்ள தலைமை பிக்குகள் பொலிஸாருக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

இதன் காரணமாகவே குறித்த பிக்குவை கைது செய்யவில்லை என பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை மதுபோதையில் இருந்த தந்தையாலேயே இளம் பிக்கு தாக்கப்பட்டுள்ளார் என சிரேஷ்ட பிக்குகள் தெரிவித்துள்ளனர். (இ-7)



யாழ்ப்பாணம் கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானத்தில் கடந்த திங்கட்கிழமை தைப்பூசத் தினத்தன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

# 'சேனா' புழுவிற்கு விரைந்து முடிவுகட்ட வேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி. சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டம் தவிர்ந்து என்று நினைக்கின்றேன். ஏனைய அனைத்து மாவட்டங்களிலுமாக 'சேனா' என்கின்ற படைப் புழுவினால் இந்த நாட்டின் விவசாயத் துறை அடியோடு அழிக்கப்பட்டு வருகின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற கடன் இணக்க சட்டமூலம் தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பாக அம்பாறை, மொனராகலை போன்ற மாவட்டங்களில் இந்த புழுவின் தாக்கம் காணப்பட்ட போதே, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இன்று ஏனைய அனைத்து மாவட்டங்களுக்கும்இந்தப்புழுவின் தாக்கம் பரவியிருக்காது.

ஆரம்பத்தில் சோளப் பயிர்ச் செய்கையைப் பாதித்த இந்தப் படைப் புழுவானது பின்னர் குரக்கன், நெல், கரும்பு, கோவா, பயற்றங்காய், வெண்டிக்காய் எனப் பரவி அனைத்தையும் அழிக்கின்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது.

தற்போது இந்த புழுவைக் கட்டுப்படுத்துவதற்கு அரச தரப்பில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்ற போதிலும், தனியார் சிலர் தங்களது கண்டுபிடிப்புகளாக பல்வேறு இயற்கை கிருமிநாசினிகளை தயாரித்தும், பயன்படுத்தியும் வருவதாகவும் தெரிய வருகின்றது.

நாடாளுமன்ற எதிர்க் கட்சியின் முதற் கோலாசானாக இருக்கின்ற மகிந்த அமரவீர, விவசாய அமைச்சராக செயற்பட்டிருந்த காலகட்டத்தில் சோளம் உள்ளடங்கலான சில தானிய வகைகளின் இறக்குமதியினை இந்த வருடத்திலிருந்து நிறுத்தப் போவதாக அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பால் ஈர்க்கப்பட்ட எமது விவசாய மக்கள் அதிகளவில் தானியச் செய்கையின்பால் ஈடுபாடுகளைக் காட்டத் தொடங்கினர். இதன்காரணமாக வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெற்று, தானியப் பயிர்ச் செய்கையினை பரவலாக மேற்கொண்டு வந்த நிலையிலேயே இந்த அழிவு இன்று ஏற்பட்டிருக்கின்றது. இந்த இடத்தில் இந்த படைப் புழுவின் வருகை தொடர்பிலான சந்தேகம் எமது மக்களிடையே ஏற்படுவது இயல்பாகும்.

அந்தவகையில் இன்றளவிற்கு சுமார் 45 ஆயிரம் ஹெக்டேயர் சோளப் பயிர்ச் செய்கை அழிவடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. எனவே, மேற்படி படைப் புழு காரணமாக அழிவுற்ற பயிர்களுக்கான நட்ட ஈடுகளை வழங்குவதற்கு இந்த அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், இந்த விவசாய மக்கள் பெற்றுள்ள வங்கிக் கடன்களையும் இரத்துச் செய்வதற்கு இந்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலையில் படைப் புழுத் தாக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள விவ சாயிகளுக்கு தலா 45 ஆயிரம் ரூபாவை அரசு வழங்கவுள்ளதாக ஓர் அமைச்சர் கூறியதாகவும், ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என விவசாய அமைச்சர் கூறியதாகவும் இருவேறு செய்திகள் ஊடகங்களில் வெளி வந்திருக்கின்றன. ஒரு ஏக்கருக்கு குறைந்தபட்சம் 45 ஆயிரம் ரூபா என வழங்கப்பட வேண்டும் என்பதையும், அதே நேரம் மேற்படி விவசாயிகளின் அடுத்தகட்ட பயிர்ச் செய்கைக்கான மானியங்களையும் வழங்க அரசு முன்வர வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# "கம்பனிகளே! தொழிலாளர் உழைப்பை சுரண்டாதே" ஆயிரம் ரூபா சம்பளத்தைக்கோரி யாழில் கவனயீர்ப்பு





(யாழ்ப்பாணம்)

மலையகத் தோட்ட தொழிலார்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று யாழ்.பேருந்து நிலைய முன்றலில் இடம்பெற்றது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஒருங்கிணைப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்தக் போராட்டத்தில் "கம்பனிகளே! தொழிலாளர் உழைப்பை சுரண்டாதே, .நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபா ஆக்கு", போன்ற பதாகைகளை கையில் ஏந்திய வண்ணமும் ,கோசங்களை எழுப்பியும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தின் நிறைவில் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய துண்டுப்பிரசுரம் விநியோகமும் இடம்பெற்றது. (இ-9)




# நேர்மையை விதையுங்கள்



ஒரு மிகப்பெரிய நிறுவனத்தின் முதலாளி தனக்கு வயதாகி விட்டதால் அவர் நிறுவனத்தின் பொறுப்பை அவரிடம் வேலை செய்யும் ஒரு திறமையானவரிடம் ஒப்படைக்க முடிவு செய்தார். எல்லோரையும் தன் அறைக்கு வருமாறு கட்டளை இட்டார். உங்களில் ஒருவர் தான் என் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும், அதனால் உங்களுக்கு ஒரு போட்டி வைக்கப் போகிறேன். யார் வெற்றியடைகிறார்களோ அவர்தான் அடுத்த மேலாளர் என்றார். என் கையில் ஏராளமான விதைகள் இருக்கின்றன. இதை ஆளுக்கு ஒன்று கொடுப்பேன். இதை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு தொட்டியில் நட்டு, உரம் இட்டு தண்ணீர் ஊற்றி நன்றாக வளர்த்து அடுத்த வருடம் என்னிடம் காட்ட வேண்டும். யாருடைய செடி நன்றாக வளர்ந்து இருக்கிறதோ அவரே என் கம்பனியின் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றார். அனைவரும் ஆளுக்கு ஒரு விதை வாங்கிச் சென்றனர். அந்தக் கம்பனியில் வேலை செய்யும் ராமுவும் ஒரு விதை வாங்கிச் சென்றான். தன் மனைவியிடம் முதலாளிசொன்ன அனைத்தையும் சொன்னான். அவன் மனைவி தொட்டியும் உரம், தண்ணீர் எல்லாம் அவனுக்குக் கொடுத்து அந்த விதையை நடுவதற்கு உதவி செய்தாள். ஒரு வாரம் கழிந்தது. நிறுவனத்தில் இருக்கும் அனைவரும் தங்கள் தொட்டியில் செடி வளர ஆரம்பித்து விட்டது என்று பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். ஆனால் ராமுவின் தொட்டியில் செடி இன்னும் வளரவே ஆரம்பிக்கவில்லை. ஒரு மாதம் ஆனது செடி வளரவில்லை, நாட்கள் உருண்டோடின. ஆறு மாதங்கள் ஆனது. அப்பொழுதும் அவன் தொட்டியில் செடி வளரவே இல்லை. நான் விதையை வீணாக்கிவிட்டேனா என்று புலம்பினான். ஆனால் தினந்தோறும் செடிக்கு தண்ணீர் ஊற்றுவதை நிறுத்தவில்லை. தன் தொட்டியில் செடி வளரவில்லை என்று அலுவலகத்தில் யாரிடமும் சொல்லவில்லை. ஒரு வருடம் முடிந்து விட்டது. எல்லாரும் தொட்டிகளை முதலாளியிடம் காட்டுவதற்காக எடுத்து வந்தார்கள். ராமு தன் மனைவியிடம் காலித் தொட்டியை நான் எடுத்துப் போகமாட்டேன் என்று சொன்னான். அவன் மனைவி அவனை சமாதானப்படுத்தி நீங்கள் ஒரு வருடம் முழுக்க உங்கள் முதலாளி சொன்ன மாதிரி செய்தீர்கள். செடி வளராததற்கு நீங்கள் வருந்த வேண்டியதில்லை. நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். தொட்டியை எடுத்துச் சென்று முதலாளியிடம் காட்டுங்கள் என்றாள். ராமுவும் காலித் தொட்டியை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றான். எல்லோருடைய தொட்டியையும் பார்த்தான் விதவிதமான செடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயரத்தில் இருந்தன. இவன் தொட்டியைப் பார்த்த அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர். முதலாளி எல்லாரையும் தன்னுடைய அறைக்கு வருமாறு சொன்னார். அருமை எல்லாரும் செம்மையாக செடியை வளர்த்துள்ளீர்கள். உங்களில் ஒருவர்தான் இன்று பொறுப்பை ஏற்றுக்கொள்ளப் போகிறீர்கள் என்றார். எல்லாருடைய செடியையும் பார்வையிட்டார். ராமு கடைசி வரிசையில் நின்றிருந்தான். அவனை அருகே வருமாறு அழைத்தார். ராமு தன்னை வேலையை விட்டு நீக்கத் தான் கூப்பிடுகிறார் என்று பயந்து கொண்டே சென்றான். முதலாளி ராமுவிடம் உன் செடி எங்கே என்று கேட்டார். ஒரு வருடமாக அந்த விதையை நட்டு உரமிட்டு, தண்ணீர் விட்டதை விலாவாரியாகச் சொன்னான். முதலாளி ராமுவை தவிர அனைவரும் உட்காருங்கள் என்றார். பிறகு ராமு தோளில் கையை போட்டுக்கொண்டு நமது கம்பனியின் நிர்வாகத்தை ஏற்று நடத்தப் போகிறவர் இவர்தான் என்றார்.

ராமுவுக்கு ஒரே அதிர்ச்சி. தன் தொட்டியில் செடி வளரவே இல்லை. பிறகு ஏன் நமக்கு இந்தப் பொறுப்பைக் கொடுக்கிறார் என்று குழம்பிப்போனார். சென்ற வருடம் நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஆளுக்கொரு விதை கொடுத்து வளர்க்கச் சொன்னேன் அல்லவா அது அனைத்தும் அவிக்கப்பட்ட விதைகள் [Boiled seeds]. அந்த விதைகள் அவிக்கப்பட்டதால் அது முளைக்க இயலாது.

நீங்கள் அனைவரும் நான் கொடுத்த விதை முளைக்காததால் அதற்கு பதில் வேறு ஒரு விதையை நட்டு வளர்த்துக் கொண்டு வந்தீர்கள்.

ராமு மட்டுமே நேர்மையாக நடந்து கொண்டான், ஆகவே அவனே என் நிறுவனத்தை நிர்வகிக்கத் தகுதியானவன் என்றார்.

நாம் சொல்லும் சொல்; நாம் பயணிக்கும் பாதை நேர்மையாக இருந்தால் வெற்றிகள் நம்மைத் தேடி வரும்...! வாழ்க்கையில் நேர்மையாக இருக்க முயல்வதும் ஒரு போராட்டம் தான். உண்மையும் நேர்மையும் தர்மத்தை பாதுகாக்கும், நேர்மை ஒரு போதும் வீண்போகாது; நேர்மையை விதையுங்கள்; பதவியும் பணமும் தேடிவரும்.

# வடக்கு பக்கம் தலை வைத்துப் படுக்கக்கூடாது

வடக்குப் பக்கம் தலை வைத்துப் படுக்கக் கூடாது என்பார்கள்-காரணம் என்ன? இதைப்பற்றி அறிய, நாம் முதலில் காந்தம் (Magnet) பற்றியும் அதன் இயல்பு பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.

காந்தம், உலோகம் (இரும்பு (Iron) செப்பு போன்ற) பொருட்களையும் காந்தத் தன்மை கொண்ட பொருட்களையும் தன்வசம் இழுக்கும் வல்லமை கொண்டது என்பது நாம் சிறு வயதில் பாடசாலைகளில் செய்த ஆராய்ச்சியின் (Experiments) மூலம் அறிந்து கொண்டவைகளாகும்.

காந்தத்திற்கு இரண்டு துருவங்கள் (Poles) உண்டு. வட துருவம் (North Pole) மற்றும் தென் துருவம் (South Pole). காந்தங்கள் இரண்டின் ஒத்த துருவங்கள் ஒன்றை ஒன்று விலகிக் கொள்ளும் (தள்ளும்) (Like Poles repel each other), எதிர் துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்க்கும் (இழுக்கும்) (Unlike poles attract each other) தன்மைகளைக் கொண்டதாகும்.

எனவே, நாம் ஆய்வுகூடத்தில் (Laboratory) ஆய்வு முடிந்த பின் எதிர் துருவங்களை ஒன்றாக வைப்போம். அப்போது தான் அதன் காந்த ஈர்ப்புத் தன்மை அப்படியே இருக்கும். ஒரே துருவங்களை ஒன்றாக வைத்தால் அதன் காந்த ஈர்ப்புத் தன்மை சிதைந்துவிடும். மேலும், இயல்பாக இருக்கும் காந்தம் (Natural Magnets) தன்னுடன் இருக்கும் இரும்புத் துண்டுகளை சிறுசிறு காந்த துண்டுகளாக மாற்றும் தன்மை கொண்டது.

### பூமி எப்படி காந்தம் ஆனது?

சூரியனின் வெப்பத்தால் பூமியின் கிழக்குப் பகுதி சூடாகிறது. அப்போது பூமியின் மேற்குப் பகுதி குளிர்ந்திருக்கிறது. இதனால் வலிமையான, நிலையான, வெப்பமான மின்னோட்டம் கிழக்கு திசையில் இருந்து மேற்கு திசைக்கு சூரியனால் உருவாக்கப்படுகிறது. எனவே மின்னோட்டத்தின் திசைக்கு வலப்புறம் இருக்கும் வடக்கு திசை, நேர் மின்னோட்டதையும் (Positive Current), இடது புறம் இருக்கும் தெற்கு திசை, எதிர் மின்னோட்டதையும் (Negative Current) பெறுகிறது. இதனால் பூமி ஒரு பெரிய காந்தம் ஆகிறது. அத்துடன் பூமி தன்னைத்தானே சுற்றுவதனாலும் காந்த சக்தியைப் பெறுகின்றது.

### மனிதன் எப்படி காந்தப் பொருள் ஆனான்?

மனித உடலில் ஓடும் இரத்தம் வெள்ளை அணு, சிவப்பு அணு மற்றும் பல இரசாயன பொருட்களைக் கொண்டது. இதில் சிவப்பு அணுவில் இரும்பு சத்துள்ளது. இந்த சிவப்பு அணுவின் காரணமாக மனிதன் பூமியின் ஈர்ப்புத் தன்மைக்கு உள்ளாகிறான்.

### எப்படி தூங்க வேண்டும்?

பூமிக்கு இரண்டு துருவங்கள் உண்டு. வட துருவம் நேர் மின்னோட்டம் உடையது. தென் துருவம் எதிர் மின்னோட்டம் உடையது. இந்த மின்னோட்டம் வடக்கில் இருந்து தெற்கிற்கும், தெற்கில் இருந்து வடக்கிற்கும் செல்லும். அதேபோல் மனிதனின் தலை நேர் மின்னோட்டம் கொண்டது. கால் எதிர் மின்னோட்டம் கொண்டது.

நாம் தெற்கு பக்கம் தலை வைத்து, வடக்கு பக்கம் கால் நீட்டிப் படுக்கும் போது பூமியின் நேர்மின்னோட்டம்மனிதனின் எதிர் மின்னோட்டத்துடன் இருக்கும். காந்தத்தின் இயல்புப்படி மின்னோட்டம் சீராக இருக்கும்.

இதனால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். இதனை மாற்றிச் செய்யும் போது, நாம் பகல் முழுவதும் உட்கார்ந்து, நடந்து மற்றும் பல வேலைகள் செய்து சேர்த்து வைத்த சக்தி சீர்குலைந்துவிடும்.

எனவே தெற்கில் தலை வைத்துப் படுப்பது உத்தமம். அதனால் போலும் இறந்தவர்களுடைய பூதவுடலையும் தெற்கே தலைவைத்து படுக்க வைப்பார்கள்.

# படைப்புழுவை அழிக்க ஜனாதிபதி செயலணி!

## அரசிடம் வலியுறுத்துகிறார் பந்துல

**(கொழும்பு)**

**சேனா படைப்புழுவினை முற்றாக அழிக்க வேண்டுமாயின் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவாக நட்டஈட்டினையும், மீள் விவசாய உற்பத்தி செயற்பாடுகளுக்கான உதவிகளையும் அரசாங்கம் வழங்க வேண்டும் என பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாக அழுத்தம் கொடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**



வஜிராஷ்ரம விகாரையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய உற்பத்திகளை மேம்படுத்தும் விடயத்தில் அரசாங்கம் மந்தகரமாகவே செயற்படுகின்றது. கடந்த அரசாங்கத்துடன் ஒப்பிடுகையில் தேசிய அரசாங்கத்தில் தேசிய உற்பத்திகள் பெருமளவு வீழ்ச்சியடைந்ததுடன் எமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு தானியங்கள் இறக்குமதி செய்யும் அவல நிலை இன்று ஏற்பட்டுள்ளது. சோளப்பயிர்களை தாக்கியுள்ள சேனா படைப்புழுவை கட்டுப்படுத்த அரசாங்கம் ஆரம்பத்திலே முறையான உபாய முறைகளை பின்பற்றவில்லை.

2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சோள உற்பத்தி 22 சதவீதத்தால் தற்போது வீழ்ச்சியை அடைந்துள்ளது.

மேலும் கடந்த ஒரு சில நாட்களில் மாத்திரம் சோள பயிர்ச்செய்கையானது தேசிய உற்பத்தி துறையில் 19சத வீத வீழ்ச்சியினை எட்டியுள்ளது. இந்நிலைமை தொடருமாயின் வீழ்ச்சியடைந்துள்ள தேசிய உற்பத்திகள் மேலும் பாதிப்படையும்.

தற்போது அரச அதிகாரிகள் சேனா படைப்புழுக்களை கட்டுப்படுத்த மாறுபட்ட உபாய முறைகளை குறிப்பிட்டுள்ளனர். அவைகள் ஒருபோதும் முறையான பெறுபேற்றினை அளிக்காது. இதற்கு பொறுப்பு வாய்ந்த ஒரு அமைப்பினை உருவாக்க வேண்டும்.

இவ்விடயத்தில் ஒருபோதும் அரசியல் செல்வாக்கு இடம்பெறக்கூடாது. ஆகவே ஜனாதிபதி இவ்விடயத்தில் நேரடியாக தலையிட்டு ஜனாதிபதி செயலணியினை அமைக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண நிதிகளும், மீள் விவசாய உற்பத்திகளுக்கான ஏற்பாடுகளையும் அரசாங்கம் விரைவாக வழங்க வேண்டும் என்ற விடயத்தையும் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேசிய உற்பத்திகள் தற்போது மாறுபட்ட விதத்தில் அழிவடைந்து வருகின்றன. ஆகவே அரசியல் விடயங்களை புறம் தள்ளி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார். (இ-7)

## "பாராளுமன்றில் படைப்புழு"

# அரசு மெத்தனம் மகிந்த விசனம்!



(கொழும்பு)

படைப்புழு பரவுவதை தடுக்க அரசாங்கம் மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. இதன்மூலம் ஐக்கிய தேசிய கட்சியின் பொருளாதார கொள்கை நாட்டுக்கு வெளிப்பட்டுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ விசனம் வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது. பிரதான பணிகள் நிறைவடைந்த பின்னர் நிலையியற் கட்டளை 27/2 கீழ் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மகிந்த இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அதிகாரத்திற்கு வந்த ஒவ்வொரு தடவையும் அவர்களின் பொருளாதார கொள்கைகளுக்கமைய விவசாயத்திற்கு மிகவும் குறைந்தளவான கவனிப்பே வழங்கப்படுகின்றது. தற்போது நாட்டில் வேகமாக பரவும் படைப் புழுக்களை ஒழிப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருக்கின்றன. இந்த படைப் புழுக்கள் நாட்டில் பல பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அரசாங்கம் பொறுப்பின்றி செயற்படுவதால் சாதாரண விவசாயிகள் தாங்களே முன்வந்து பல்வேறு பீடை நாசினிகளை பயன்படுத்துகின்றனர்.

ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் அக்கறையின்றி இருப்பது தொடர்பாக கவலையை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது விவசாயிகள் தமது பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாது வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் படைப் புழுக்களை ஒழிப்பதற்காக அரசாங்கம் நேரடியாக தலையிட நடவடிக்கையெடுக்க வேண்டும்.

படைப் புழுக்களின் பரவல் எச்சரிக்கை காணப்படும் பயிர்ச் செய்கைகள் மற்றும் பிரதேசங்கள் தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் .

அத்துடன் படைப் புழுக்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக மதிப்பீடுகளை மேற்கொண்டு விவசாயிகளுக்கு நட்டஈடுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்குமாறும் , பாதிக்கப்பட்ட விவசாயிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் அனைத்தையும் நீக்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அடுத்த போகத்திற்கு பயிர் செய்வதற்கான விதைகளையும் உரத்தையும் வழங்குமாறும் அதே போன்று அடுத்த போகம் வரை வாழ்க்கைச் செலவு உதவிகளை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## யுத்தத்திற்கு முகம்கொடுப்பது போன்று

# படைப்புழுவை ஒழிக்க ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

விவசாயத்துறைக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ள சேனா படைப்புழுவைக் கட்டுப்படுத்துவதற்கு யுத்தத்திற்கு முகம் கொடுப்பதைப் போன்ற அர்ப்பணிப்பு மற்றும் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.



இதற்காக ஒரு காலவரையறையை நிர்ணயித்து தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் அரசாங்க மற்றும் தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் பூச்சிக்கொல்லி முறைமையொன்றை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

சேனா படைப்புழு பரவி வருவதன் காரணமாக விவசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு முகம்கொடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்து கண்டறிவதற்காக நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்துள்ளார். (இ-7)

# படைப்புழுவை ஒழிக்க 15 பரிந்துரைகள்

## விவசாயத் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

நாடு முழுவதும் பயிர் செய்கைகளை அழித்து வரும்சேனா படைப்புழுவை ஒழிப்பதற்காக பல்வேறு தரப்பினரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள 15 வகையான பரிந்துரைகளை விவசாய நிலங்களுக்கு பயன்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



சுயதயாரிப்பு முறை மூலம் படைப்புழுவை ஒழிப்பதற்கான பரிந்துரைகளை சில விவசாயிகள் முன் வைத்ததாகவும், அவற்றை பரிசோதனைக்குட்படுத்தி விவசாய காணிகளுக்கு பயன்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன்படைப்புழுவை ஒழிப்பதற்கான ஏதேனும் முறைமைகள் இருக்குமானால் விவசாய திணைக்களத்துக்கு அறிவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை படைப்புழுவினை ஒழிப்பதற்காக ஐந்து வகையான கிருமி நாசினிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# படைப்புழுவை இல்லாதொழிக்க விஞ்ஞான தொழில்நுட்ப உதவி

(கொழும்பு)

சேனா படைப்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பிரதான நான்கு விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவியை பெற்றுக்கொண்டு இந்த படைப்புழு தாக்கத்தை முழுமையாக நாட்டில் இருந்து இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளதாக விஞ்ஞான தொழில் நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

தீவிரமாக பரவிவரும் சேனா படைப்புழு தாக்கம் குறித்து விளக்கமளிக்கும் வகையிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்றுப் புதன்கிழமை விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சேனா படைப்புழு தொடர்பான உண்மைத் தன்மையை மறைக்க அரசு முயற்சி-விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

விவசாயத்துறையில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் சேனா படைப்புழு தொடர்பான உண்மைத் தன்மையை அரசாங்கம் மறைப்பதற்கு முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை கூடிய நாடாளுமன்ற 'அமர்வில் விவசாய அமைச்சரின் உரைக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், "படைப்புழுக்கள் பருவப்பெயர்ச்சி மூலம் இலங்கைக்கு வந்துள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த புழுவின் ஆயுட்காலம் 7 நாட்கள் என்று கூறுகின்றீர்கள். பருவபெயர்ச்சி என்றால் நீண்ட தூரம் அப்புழுக்க்ளுக்கு பறந்து வர முடியுமா? இந்த படைப்புழுக்கள் விதைகளின் ஊடாக வந்ததை மறைக்கவே இவ்வாறு கூறுகின்றார்கள்.

படைப்புழு பரவலால் பகுதியளவில், முழுமையாக என இரு தரப்பினர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, முழுமையாக பாதிக்கப்பட்டவர்கள் மாத்திரமின்றி பகுதியளவில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் காப்புறுதி வ்ழங்கப்பட வேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர்.
– லா புருயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மணல் தட்டுப்பாட்டை ஆளுநர் நீக்கவேண்டும்

வடபுலத்தின் அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளின் நிர்வாக செயற்பாடுகள் மிகவும் மந்தமானவையாக இருப்பது தொடர்பில் பொதுமக்கள் பலரும் தங்களின் மன ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக அரச அதிகாரிகளை அலுவலகங்களில் சந்திக்க முடியவில்லை என்றும் இதனால் பொது மக்கள் அலைந்து திரிய வேண்டிய நிலையிருப்பதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டிவருவது தொடர்பில் யார் நடவடிக்கை எடுப்பது என்று தெரியாமல் உள்ளது.

முன்பு யாழ் மாவட்டத்தின் அரச அதிபராக கே.கணேஷ் அவர்கள் கடமையாற்றிய போது, பொதுமக்கள் தெரிவிக்கும் குறைபாட்டை அவரது கவனத்திற்குக் கொண்டு சென்றால், அடுத்த கணமே அவர் களத்தில் இறங்கிவிடுவார்.

ஆனால் இன்றைய நிலைமைகள் அவ்வாறன்று. அதற்காக அதனை அப்படியே விட்டுவிடுவதென்பது பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதால், இது விடயங்களில் வடக்கின் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலையிட வேண்டும் என்பது நம் கோரிக்கை.

அதாவது வடபுலத்தில் பொதுமக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் என்ன என்பதை பொதுமக்களிடமிருந்து அறிந்துகொள்வது வடபுலத்து நிர்வாகத்தை செம்மைப்படுத்த பேருதவியாக இருக்கும்.

அதேவேளை இப்போது வடபுலத்தில் அதிலும் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் கட்டிடத்தேவைக்காக மணலைப் பெறுவதென்பது பாரிய பிரச்சினையாக உள்ளது. மணல் பெறுவதற்காக விண்ணப்பித்தால் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு வருடக்கணக்காகிறது.

இதனால், அதிக விலைகொடுத்து மணலைப் பெற வேண்டிய சூழ்நிலைக்கு பொதுமக்கள் ஆளாகின்றனர். கறுப்புச்சந்தையில் ஒரு டிப்பர் மணலின் விலை நாற்பதாயிரம் என்ற எல்லையைத்தாண்டி விற்பனையாகிறது.

மணல் என்பது கட்டிடத் தேவைக்கன்றி வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப் போவதில்லை என்பது தெளிவு.

அதேவேளை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபுலத்தில் வீடமைப்புக்களும் கட்டிட நிர்மாணங்களும் நடப்பது தவிர்க்க முடியாதவை. ஆனாலும் ஏனோ தெரியவில்லை மணல் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உரிய ஒழுங்குகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

சரி, சில நியதிகளை நிறைவேற்றுவதன் காரணமாகவே மணல் விநியோகத்தை துரிதப்படுத்த முடியவில்லையென்றால், அதனை ஊடகங்கள் வாயிலாகப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

இதைவிடுத்து மணலிற்கு விண்ணப்பித்தோம். ஆனால் இன்னமும் கிடைக்கவில்லை என்று கூறுகின்ற பொதுமக்களுக்கு விதண்டா வாதப்பதில்களை தெரிவிப்பது எந்தவகையிலும் பொருத்துடையதன்று.

இது தவிர, மணல் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக பொதுமக்கள் பலவாறான விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

உயர் அதிகாரிகள் இலாபம் பெறுவதற்காகவே மணல் விநியோகம் தடுக்கப்படுகிறது என்றும் முக்கியமான அரசியல்வாதிகள் சிலர் மணல் விநியோகத்தில் இலாபம் உழைப்பதற்காக செயற்கைத் தட்டுப்பாட்டை மேற்கொள்கின்றனர் என்றெல்லாம் கூறப்படுகின்றது.

எனவே இவற்றையெல்லாம் தவிர்க்க மணல் விநியோகம் தொடர்பில் வடக்கின் ஆளுநர் தலையிட்டு நிலைமையை சுமுகமாக்க வேண்டும்.

# பாதுகாப்பு செயலாளரை பதவி நீக்கம் செய்யுங்கள்

## ரொஷான் ரணசிங்க கோரிக்கை

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கேமசிறி பெர்ணான்டோவை பதவிநீக்கம்செய்யுமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றமிழைத்த இராணுவத்தினர் தொடர்பிலான தகவல்கள் இருந்தால் சமர்ப்பிக்குமாறு, பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ, புலம்பெயர் அமைப்பினரிடம் கோரியிருந்தார்.

இந்தக் கருத்துக்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட அவர், இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கண்டியில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், இலங்கை பாதுகாப்புச் செயலாளரா அல்லது புலம் அமைப்புக்களின் ஊடகப்பேச்சாளரா? இவ்வாறு கதைத்தார் என எம்மால் ஊகிக்க முடியாமல் உள்ளது. ஜனாதிபதியின் கீழ்தான் பாதுகாப்பு அமைச்சு உள் ளது. இவ்வாறான ஒரு அமைச்சின் செயலாளர் முப்படையினருக்கு எதிராக கருத்து வெளியிடுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

அவர் நிதானமாகத்தான் கதைத்தாரா எனும் சந்தேகமும் எழுகிறது.

இது 30 வருட காலமாக நாட்டில் நீடித்த யுத்தத்திற்காக உயிர் தியாகம் செய்த இராணுவத்தினருக்கு செய்த அவமரியாதையாகும்.

எனவே, ஹேமசிறி பெர்ணான்டோவை பதவியிலிருந்து நீக்கி, புதியவரை நியமிக்க வேண்டும் என நாம் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கிறோமென தெரிவித்துள்ளார். (ம-3)

# முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை உயர் நீதிமன்றத்தில் முன்னிலையாக உத்தரவு

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பில் எதிர்வரும் 7ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக கூறி முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக பேராசிரியர்களான சந்ரகுப்த தேநுவர, ஹேவா வடுகே சிறில், பிரஷாந்த குணவர்தன ஆகியோரால் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதன்படி குறித்த மனு நேற்று உயர்நீதிமன்ற நீதிபதிகளான விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா ஆகியோர் முன்னிலையில் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கின் பிரதிவாதியான முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் சில்வா தமது கட்சிக்காரர் குறித்த வழக்கு விசாரணைக்கு தயார் என தெரிவித்தார்.

எனினும்குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்காக சட்ட மா அதிபரின் ஒத்துழைப்பு தேவை என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி குறித்த மனு மீண்டும் எதிர்வரும் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அன்றைய தினம் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த தினத்தில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட் டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

# பொலித்தீன் அற்ற நகரமாக மாறும் சாவகச்சேரி

(சாவகச்சேரி)

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் பாவனை முற்றாக இல்லாமல் செய்யப்படும் என சாவகச்சேரி நகராட்சி மன்ற பொதுச்சுகாதார பரிசோதகர் பி.தளிர்றாஜ் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள "பொலித்தீன் அற்ற நகரம்" செயற்றிட்டம் தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது பகுதியில் உணவகங்களில் இருந்தே அதிகளவான பொலித்தீன் கழிவுகள் அகற்றப்படுகின்றன.

அதனைக்கட்டுப்படுத்த கடந்த முதலாம் திகதி முதல் சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட உணவகங்களின் பொலித்தீன் கழிவுகளை தனியாக பிரித்து அகற்றுகின்ற நடைமுறை அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இதனால் உணவக உரிமையாளர்கள் பொலித்தீன் பாவனையைப் படிப்படியாக குறைத்து வாழை இலை போன்றவற்றை பயன்படுத்த ஆரம்பித்து எமது செயற்றிட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். மேலும் நகரப் பகுதி, சந்தைப் பகுதி ஆகியவற்றில் பொலித்தீன் கழிவுகளை மட்டும் சேகரிப்பதற்கு விசேட கழிவு தொட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி எமது பகுதி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொலித்தீன் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டத்தையும் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த பொலித்தீன் அற்ற நகரம் செயற்றிட்டத்துக்கு வர்த்தகர்கள் .பொதுமக்கள் சிறந்த ஒத்துழைப் பினை வழங்கி வருகின்றனர். அத்தோடு எமது நகராட்சி மன்ற தவிசாளர் உறுப்பினர்கள் அனைவரும் பூரண ஆதரவையும் பங்களிப்பையும் வழங்கியுள்ளனர்.

இதனால் எமது சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் 2020 ஆம் ஆண்டு பொலித்தீன் பாவனை முற்றாக இல்லாமல் செய்யப்படும்.

மேலும் பொலித்தீன் பயன்பாட்டையும் விற்பனையையும் எமது பகுதிக்குள் முதலாவதாக முற்றாக நிறுத்துகின்ற வர்த்தகருக்கு விசேட விருதும் ஊக்குவிப்பும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பொதுச் சுகாதார பரிசோதகர் பி.தளிர்றாஜ் மேலும் தெரிவித்தார். (இ-89)

## முயற்சியே மூலதனமாக...

● வெற்றி பெறுவதற்கு "மூலதனமே" முயற்சிதான். முயற்சியில்லாமல் எதையும் சாதிக்க முடியாது. உலகத்தில் சாதித்துக்காட்டியவர்களின் சாதனைகளைத்தான் நாம் பேசிக்கொண்டிருக்கின்றோமே தவிர, பிறரைப் பற்றி நாம் அதிகம் பேசுவதில்லை.

● எனவே நீங்களும் சாதிக்க முயற்சி செய்யுங்கள். உங்களைப் பற்றியும் உலகம் பேச வாய்ப்புள்ளது. "முயற்சி" செய்யாமல் தோல்வியடைந்துவிட்டதாகச் சொல்பவர்கள் ஒருபோதும் முன்னேற முடியாது.

● முயற்சி செய்து தோல்வியடைந்துவிட்டால் அதுவும் ஒரு பயிற்சி என்றே கருதவேண்டும். விழுந்து விட்டு எழுந்து நிற்காதவனை தான் எல்லோரும் பார்த்து சிரிப்பார்கள். விழுந்துவிட்டால் காயங்களைக் கூட பார்க்காமல் எழுந்து ஓடுபவனைத்தான் எல்லோரும் பார்த்து வியப்பார்கள்.

● புரிந்து கொள்ளுங்கள். விதைக்கா விதை ஒருபோதும் விருட்சமாவதில்லை. முயற்சி செய்யாத செயல்கள் வெற்றி பெறுவதில்லை. முயற்சியைச் செய்யுங்கள். வெற்றியைப் பெறுங்கள். முயற்சியே மூலதனம் என்று நம்புங்கள்.

## சத்திய தரிசனம்

### உனக்குள் இருக்கும் இறைவன்



❖ பிறர் அறியும் வண்ணம் தொண்டு செய்யக் கூடாது, அடக்கமாக இருங்கள். பிறருக்கு தொண் டாற்ற வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றி கூறுங்கள்.

❖ வாழ்க்கை ஒரே திசையில் மட்டும் செல்லும் நீரோட்டம் என்பதால், அதைப் பயனுள்ள வகையில், குறிப்பாக பக்தி வழியில் செலவழிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

❖ மனித இதயத்தில் கோபத்தீ, காமத்தீ, பாசத்தீ, ஆசைத்தீ இப்படி பலவிதமான நெருப்புகள் கனன்று கொண்டிருக்கின்றன. அவற்றை வளர விடக்கூடாது.

❖ தூய்மையற்ற சிந்தனைகள் படிந்தால், அசுத்தமான எண்ணங்கள் மனக்கண்ணாடியில் வழியே இதயத்திரையில் படிந்து விடும். எனவே நல்ல திசையில் மனதைத் திருப்ப வேண்டும்.

❖ படத்தை கடவுளாக வணங்கலாம். கடவுளைப் படமாக கருதக்கூடாது. கடவுள் நிலைக்கு உயர்த்தலாம். ஆனால், கடவுளைக் கல்லாக, காகித துண்டாக கீழ் நிலைக்கு இறக்கக் கூடாது.

❖ நீ தெய்வத்துடன் கலந்து இருக்கிறாய். கடவுளும் நீயும் ஒன்று தான். உன்னுள்ளே கடவுள் இருக்கிறார் என்பது தான் சத்தியம்.

# அண்ணாசிலையடி இளைஞரை வென்று அரையிறுதிக்கு தெரிவானது றேஞ்சஸ்



உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கல்விசார் புலமைப்பரிசில் நிதியதுக்கான வடமராட்சி லீக் அனுசரணையுடன் வடமராட்சி உதைபந்தாட்ட லீக் அணிகள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் போட்டியொன்றில் அண்ணாசிலையடி இளைஞர் அணியை 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டதடதிற்கு தகுதி பெற்றது றேஞ்சஸ் அணி. றேஞ்சஸ் அணிசார்பில் கைலாஸ் 3 கோல்களும் ஈழவேந்தன் 2 கோல்களையும் ஆத்திகன், கௌதமன், மதுசாந் ஆகியோர் தலா ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர். (க)



அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட மைதானத்திற்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் ஒளி விளக்குகள் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினரும், சமாதான நீதவானும், ஆசிரியருமான பொன்னம்பலம் ஆதவனினால் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன. (க-30)

# பருத்தித்துறை பிரதேச செயலக பெண்களுக்கான கிரிக்கெட் சம்பியன் பட்டத்தை வென்றது ஐக்கியம் அணி

பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கு கிரிகெட் போட்டி புற்றளை மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது.

இதில் 5 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. கடும்போட்டிக்கு மத்தியில் பருத்தித்துறை ஐக்கியம் மற்றும் சென்.தோமஸ் விளையாட்டுக்கழகங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இறுதிப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.தோமஸ் களத்தடுப்பை தெரிவு செய்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பாட ஐக்கிய வீராங்கனைகள் சென்.தோமஸ் வீசிய பந்துகளை நாலாபக்கமும் எல்லை கோட்டுக்கு பறக்க விட்டனர்.

இறுதியில் 5 ஓவர் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 43 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.தோமஸ் ஐக்கியத்தின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 21 ஓட்டங்களுக்கு சுருண்டது.

2019 ஆம் ஆண்டுக்கான பெண்கள் துடுப்பாட்டத்தில் சம்பியனாகத் தெரிவானது ஐக்கியம் அணி. (க)

# அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விளையாட்டுப் போட்டிகள்

அரியாலை 100 ஆவது ஆண்டுநிறைவு சுதேசிய விழாவினை முன்னிட்டு நடத்தும் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

வடமாகாண ரீதியிலான ஓவர் கேம் 5 பேர் over Game கரப்பந்தாட்டம் மின்னொளியில், வடமாகாண ரீதியில் வலைப்பந்தாட்டம், வடமாகாண ரீதியில் தாச்சிப் போட்டி, வடமாகாண ரீதியில் ஆண்களுக்கான கபடி போட்டி, வடமாகாண ரீதியில் ஆண், பெண் இருபாலாருக்குமான கயிறு இழுத்தல் போட்டிகள், வடமாகாண ரீதியில் கரப்பந்தாட்டம் (செற்றப்) போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 077 617 6988, 077 309 5745 எனும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

# பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ்சை வீழ்த்தியது நல்லூர் பிறவுண்கொஸ் அணி



யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சுப்பர் லீக் என்னும் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது பருவகாலப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண்கொஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் ரைரன்ஸ் ஆகிய அணிகளும் உள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஆட்டமொன்றில் நல்லூர் பிறவுண்கொஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற பிறவுண்கொஸ் அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

தொடக்கத்திலிருந்து அடித்தாட முற்பட்ட பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ் அணி, ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சாகித்தியனின் 27 ஓட்டங்களின் உதவியுடன், 74 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

அதன் பிறகு ஜோடி சேர்ந்த நிரோசன் - சஜீகன் இணைப்பாட்டம் அணியை 155 ஓட்டங்கள் வரையிலும் நகர்த்திச் சென்றது. நிரோசன் 49 ஓட்டங்களுடனும், சஜீகன் 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அதன் பின்னர் அணியின் விக்கெட்டுகள் மளமளவென வீழ்த்தப்பட, 19.3 ஓவர்களில் 170 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்களும் இழக்கப்பட்டன.

பந்துவீச்சில் பிறவுண்கொஸ் அணி சார்பாக, பிரபு, சுஜன் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

171 ஓட்டங்கள் என்ற பெரிய வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய நல்லூர், பிறவுண்கொஸ் அணி, தொடக்கம் முதல் சரிவையே சந்தித்தது. முன்வரிசை வீரர்களில் பிரியதர்சன் (22) மாத்திரம் பங்களித்தார். 11.3 ஓவர்களில் 74 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து, தோல்வியடையும் நிலையில் இருந்த அணிக்கு, நோபேர்ட் - பிரபு ஜோடி போக்கையே மாற்றியது. இருவரும் தமக்கிடையில் 66 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த போது, நோபேர்ட் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதிவரையில் களத்திலிருந்து பிரபு 36 ஓட்டங்களை எடுத்து, இறுதிப் பந்தில் அணியை வெற்றிக்கும் அழைத்துச் சென்றார். 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றியைப் பெற்றது.

பந்துவீச்சில் பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ் சார்பாக சேந்திரன் 3 விக்கெட்டுகளையும், லதுர்சன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (க-26)

# பாடும் மீன்-சென்நீக்கிலஸ் அரையிறுதியில்

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, 21 வயதுக்குட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியொன்றும் நடைபெற்று வருகின்றது.


இதன் இரண்டு காலிறுதியாட்டங்கள் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்றது.

மூன்றாவது காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதியது. இதில் பாடும்மீன் அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

நான்காவது காலிறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதியது. இதில் சென்.நீக்கிலஸ் அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

ஏற்கனவே மயிலங்காடு ஞானமுருகன் மற்றும் பொற்பதி அணிகளும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளமையும்சுட்டிக்காட்டத்தக்கது. (க-26)

# இந்தியாவுக்கு வெற்றி



நேப்பியரில் நடந்த நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில், 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது.

இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி நேப்பியரின் மெக்லீன் பார்க் மைதானத்தில் நேற்று நடந்தது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

தொடக்க வீரர்கள் கப்தில் மற்றும் மூன்ரோ இருவரின் விக்கெட்டையும் ஷமி கைப்பற்றினார். அதன் பின்னர் வந்த தலைவர் கேன் வில்லியம்சன் நிலைத்து நின்று ஆடினார். ஆனால் ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்த வண்ணம் இருந்தன.

சுழற்பந்து வீச்சாளர்கள் சஹால், குல்தீப் யாதவ் ஆகியோர் நியூசிலாந்தின் விக்கெட்டுகளை காலி செய்தனர். இதனால் நியூசிலாந்து அணி 38 ஓவர்களில் 157 ஓட்டங்களுக்கு சுருண்டது. அதிகபட்சமாக கேன் வில்லியம்சன் 81 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 64 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்திய அணி தரப்பில் குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகளும், ஷமி 3 விக்கெட்டுகளையும், சஹால் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். அதன் பின்னர் இந்திய அணி களமிறங்கியது.

ரோஹித் ஷர்மா 11 ஓட்டங்களில் அவுட் ஆனதைத் தொடர்ந்து, தலைவர் விராட் ஹோலி களமிறங்கினார். அணியின் ஸ்கோர் 44 ஆக இருந்தபோது அதிக சூரிய ஒளியால் ஆட்டம் தடைப்பட்டது.

இதனால் துடுப்பாட்ட வீரர்களுக்கு சூரிய ஒளி இடையூறாக இருந்ததைத் தொடர்ந்து, கள நடுவர்கள் வீரர்களின் பாதுகாப்பு கருதி ஆட்டத்தை சிறிது நேரம் நிறுத்தினர். பின்னர் ஒரு ஓவர் மட்டும் குறைக்கப்பட்டு, 156 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு ஆட்டம் தொடங்கியது.

விராட் ஹோலி 45 ஓட்டங்களில் இருந்தபோது பெர்குசன் பந்துவீச்சில் அவுட் ஆனார். அதன் பின்னர் ராயுடு களமிறங்கினார்.

அரைசதம் கடந்த ஷிகார்தவான் 103 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 75 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றி பெற வைத்தார்.

இந்திய அணி 34.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 156 ஓட்டங்கள் எடுத்து, 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (க)

## நீராவியடிப் பிள்...

தொல்லியல் திணைக்களத்தினரின் உதவியுடன் நேற்று அவசர அவசரமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு நாயாறு நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு கடந்த 14 ஆம் திகதி அன்று அப்பகுதித் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளுக்காக சென்றவேளை அப்பகுதியில் குடியிருக்கும் பௌத்த துறவிக்கும் மக்களுக்குமிடையில் முறுகல் நிலை தோன்றியிருந்ததோடு வழிபாட்டுக்கு சென்ற மக்களுக்கு பௌத்த பிக்குவாலும் தென்பகுதியிலிருந்து சென்ற பெரும்பான்மையினத்தவராலும் தடைகள் ஏற்படுத்தபட்டது .

இந்நிலையில் இந்த முறுகல் நிலை தொடர்பாக அமைதிக்கு பங்கம் ஏற்பட்டதாக தெரிவித்து முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தனர். அந்த வகையில் எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு இருதரப்பினருக்கும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் அழைப்புவிடுத்திருந்தது.

எனினும் குறித்த புத்தர் சிலையினை விரைவில் திறக்க பௌத்த மதகுரு முற்படுவதை உணர்ந்து அவசர நிலைமையாக கருதி ஆலய நிர்வாகத்தினர் மற்றும். தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரான வி.நவநீதன் ஆகியோர் நகர்த்தல் பத்திரம் ஒன்றின் மூலம் அது தொடர்பான வழக்கு 22.01.2019 நேற்று முன்தினம் விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

வழக்கு விசாரணைகளில், குறித்த புத்தர் சிலை அமைக்கப்பட்டது சட்டவிரோதமானது என்பது. தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிராமமக்களின் சார்பில் ஆஜரானவர்களினால் வெளிப்படுத்தப்பட்டது. அத்தோடு கடந்த பொங்கல் வழிபாட்டின் போது குறித்த பிக்குவால் வழிபாடுகளுக்கு சென்ற தமிழ் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தபட்டிருந்தமையும் புகைப்படங்கள் ஆதாரம்மூலம் காண்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் இன்றையதினம் இருதரப்பினரையும் நீதிமன்றில் ஆஜராகுமாறு மன்று கட்டளை பிறப்பித்திருந்தது .

இந்த நிலையில் நேற்றையதினம் பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினரின் பூரண ஆதரவுடன் பெரதெனியா பல்கலைகழக பேராசிரியர் கலாநிதி கபில குணவர்த்தன மற்றும் புல்மோட்டை அரிசிமலை பகுதியில் விகாரை அமைத்து தங்கியுள்ள பிக்குகளின் பங்குபற்றலுடன் சட்டவிரோதமான வகையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது .

இன்றையதினம் மாவட்ட நீதிமன்றில் இந்த சர்ச்சைக்குரிய விகாரை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளபடவிருந்த நிலையில் அவசர அவசரமாக விகாரை மற்றும் சிலை அமைக்கும் பணிகள் பூர்த்தியாகாத நிலையில் இந்த சிலை திறந்துவைக்கப்பட்டுள்ளது .

இதேவேளை தகவலறிந்து குறித்த இடத்திற்கு விரைந்த முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கிராம மக்களுடன் அங்கிருந்த பௌத்த துறவிகள் மற்றும் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்தவர்கள் சிலரும் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதுடன் அநாகரிகமான வார்த்தை பிரயோகங்களுடன் அடாவடித்தனங்களில் ஈடுபட்டனர்.

மேலும் அங்கு செய்தி சேகரிப்பிற்குச் சென்ற ஊடகவியலாளர்கள் தென்னிலங்கையில் இருந்து வருகைதந்தவர்களாலும், பௌத்த துறவிகள் சிலராலும் பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்களாலும் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதுடன், ஊடகவியலாளர்களுடனும் அநாகரிகமாக நடந்து கொண்டதுடன் அனைத்து ஊடகவியலாளர்களும் அரசியல் ஊடகவியலாளர்கள் எனவும் விமர்சித்து கேலி பண்ணும் விதமாகவும் செயற்பட்டனர்.

இந்த சிலை திறப்புக்காக வருகைதந்த பௌத்த பிக்குகள் அண்மையில் குமுளமுனை குருந்தூர் மலையில் விகாரை அமைப்பதற்காக சிலைகளுடன் வருகைதந்த வேளை கிராம மக்கள் தடுத்ததால் முறுகல் நிலை ஏற்பட்டு பொலிஸார் தலையிட்டு தீர்த்துவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது .

அத்தோடு இந்த பௌத்த பிக்குகள் அண்மைக்காலமாக புல்மோட்டை பகுதியில் நிலைகொண்டு மக்களுக்கு சொந்தமான காணிகளில் பல சிங்கள குடியேற்றங்களையும் விகாரைகளையும் அமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது

இருப்பினும் குறித்த பகுதியில் நிலைகொண்டுள்ள பௌத்த துறவியான கொலம்ப மேதாலங்க தேரரை சந்தித்த ஊடகவியலாளர்கள் இந்த விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வினவியபோது அதனை முற்றுமுழுதாக மறுத்துள்ளதோடு தான் அனைத்து அனுமதிகளும் பெற்றே விகாரை அமைப்பதாகவும் தனக்கு இங்கு அடையாள அட்டை கூட பிரதேச செயலக அனுமதியுடனே பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார் .

பிரதேச செயலகம் எந்த அனுமதியும் வழங்கவில்லை என தெரிவிக்கும்போது, தான் அடையாள அட்டை கூட பிரதேச செயலாளரிடம் அனுமதி பெற்றே பெற்றேன் என்று தேரர் தெரிவித்தமையானது தற்போது மக்கள் மத்தியில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-281)

## தீர்வொன்றையே...

பிரித்தானிய வெளிவிவகார பிரிவின் தெற்காசிய திணைக்களத்தின் தலைவரும் இந்தியாவின் ஒருங்கிணைப்பாளருமான பர்கஸ் ஓல்ட், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்து கலந்துரையாடினார். இந்த் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது தற்போது நிலவும் அரசியல் நிலைவரம் தொடர்பில் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன், 2015 ஜனவரி மற்றும் ஆகஸ்ட் தேர்தல்களில் மக்கள் கொடுத்த ஆணையை சுட்டிக்காட்டிய அதேவேளை ஜனாதிபதியும் பிரதமரும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்தினார்.

அண்மையில் இடம்பெற்ற அரசியல் குழப்பங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், சட்டவிரோதமானதும் அரசியல் சாசனத்திற்கு முரணானதுமான செயற்பாடுகளை நாம் எப்போதும் அனுமதிக்கப் போவதில்லை. நாம் அவ்வாறு செயற்படுகின்ற போது எல்லோரையும் திருப்திபடுத்த முடியாது எனவும் கொள்கையின் அடிப்படையில் நாம் சில முடிவுகளை எடுக்கின்றபோது, ஏனைய விடயங்கள் குறித்து பெரிதாக கவனம் செலுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

இதன்போது புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பில் விளக்கமளித்த எம்.ஏ. சுமந்திரன், 2016 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மிக நீண்ட நடைமுறைகளும் முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளதனை எடுத்துக்கூறிய அதேவேளை, இரண்டு பெருன்பான்மை கட்சிகளும் புதிய அரசியல் யாப்பின் உள்ளடக்கம் மற்றும் நோக்கங்களை குறித்து தமது மக்களிற்கும் கட்சியினருக்கும் தெளிவுபடுத்துவதில் அசமந்த போக்கினை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் வரலாற்றில் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளினதும் இயன்றளவு ஒத்துழைப்புடன் ஒரு அரசியல் யாப்பினை நிறைவேற்றிக் கொள்வதற்கான முதற் சந்தர்ப்பம் இதுவாகும் என்பதனை சுட்டிக்காட்டியதுடன், நாங்கள் ஒருமித்த பிரிபடாத பிரிக்கமுடியாத நாட்டிற்குள்ளேயே ஒரு தீர்வினை எதிர்பார்க்கிறோம்.

ஆகவே நியாயமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வு கொண்டு வரப்படுகின்ற போது நாங்கள் அதனை எமது மக்கள் முன் எடுத்து செல்லுவோம் எமது மக்கள் அத்தகைய தீர்வுடன் கூடிய ஒரு புதிய அரசியல் யாப்பினை அங்கீகரிப்பதற்கு தமது ஆதரவினை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்றும் கூறினார்.

சர்வதேச சமூகத்தின் வகிபாகம் குறித்து கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன், இலங்கை அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ள நிலையில் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதனை உறுதி செய்வது தவிர்க்க முடியாததொன்று என்றும் சர்வதேச சமூகம் இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதனை உறுதி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் தீர்மானமானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அந்த தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் குறித்த காலவரையறைக்குள் நிறைவேற்றபடுவதனை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து கருமங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இச் சந்திப்பின்போது இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் மற்றும் பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் பிரிவு பிரதானி போல் கிறீன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-3)

## கூட்டமைப்பு எம்....

ப்பின் எம்.பிக்கள் அநேகர் நேற்றைய விருந்துபசாரத்தில் கலந்து கொண்டிருந்தனர். விருந்துபசாரத்தின்போது அமைச்சர்கள் சிலர் பாடல்கள் பாட உற்சாகமாக விருந்துபசாரம் நடைபெற்றது. (ம-3)

## நிறைவேற்று அதி...

மேலும் கூறுகையில்,

பாராளுமன்றை மலினப்படுத்தி மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் வகையில் உத்தேச அரசியல் அமைப்பு காணப்படுகின்றது.

அரசியல் அமைப்பிற்கு எதிர்ப்பை வெளியிடுதல் என்பது அனைத்து திருத்தங்களையும் எதிர்ப்பதாகாது.

தற்போதைய அரசியல் அமைப்பில் விரிவான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்வதுடன், அரசியல் கட்சிகளின் பிரிவினைவாத அல்லது சமஷ்டி முறையிலான ஆட்சியை எதிர்க்கிறோம்.

19ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக மட்டும் எத்தனை பெரிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. பிரதேச சமூகமொன்று தேசிய ரீதியில் செயற்படுவதற்கான அவகாசம் இருக்க வேண்டும்.

எதிர்வரும் தேசிய தேர்தலின் போது அரசியல் அமைப்பு குறித்து யோசனைகளை முன்வைத்து மக்களிடம் ஆணையை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களிடமும் அரசியல் கட்சிகளிடமும் கோரி நிற்பதாக மகிந்த ராஜபக்ஷ அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை காலமும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்தால் அது தேசிய பாதுகாப்பினை பாதிக்கும் என மகிந்த தரப்பு கூறி வந்ததுடன், தற்போதைய நிறைவேற்று அதிகார முறையில் மகிந்தவினால் ஜனாதிபதி பதவி வகிக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தமிழர்களை கை...

கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், யுத்தம் நிறைவடைந்து பத்தாண்டுகள் பூர்த்தியாகப் போகின்றது. எனினும், பெரும்போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வழங்கக்கூடிய தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கான வல்லமை அரசாங்கத்திற்கு இல்லை.

ஏற்கெனவே இருந்த தொழிற்சாலைகளை புதுப்பித்து இயக்கக்கூட அரசாங்கங்களுக்கு ஏன் முடியவில்லை. வடக்கு கிழக்குத் தொடர்பான அபிவிருத்திகள் குறித்து அரசாங்கம் சிறிதளவேனும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

அண்மையில் கிளிநொச்சி உள்ளிட்ட வடக்குப் பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கள் தொடர்பில் இதுவரை அம்மக்களுக்கான நிரந்தரத் தீர்வுகள் முழுமையாக முன்வைக்கப்படவில்லை.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் கடும் யுத்தத்தால் தமது வாழ்வினைத் தொலைத்தவர்கள். அவர்களது வாழ்வாதாரத்தினை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமையாகும்.

வடக்கு - கிழக்கு தொடர்பாக இந்த அரசாங்கத்தின் எண்ணம் தான் என்ன என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. வடக்கு, கிழக்கின் யுத்தப் பாதிப்புகளை மறைக்கவே அரசாங்கம் முயற்சித்து வருகிறது எனத் தெரிவித்தார். (ம-3)

## கூட்டமைப்பு கட....

ளுக்கு தெற்கு செவிசாய்த்திருக்கும் என அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

விஜேராமயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் ஊடகங்களுக்கு கருத்துவெளியிட்ட போதே அவர் இத்னைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு நாட்டின் பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சி பதவி வழங்கப்பட்டிருந்தது. நாட்டில் அனைத்து மக்கள் மீதும் தாக்கம் செலுத்தும் பல்வேறு பிரச்சினைகள் வந்த போதெல்லாம் மக்களின் குரலாக ஒலிக்க வேண்டிய எதிர்க்கட்சி பொறுப்பை சுமந்த தமிழ்க் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவையும் அரசாங்கத்தையும் பாதுகாக்கும் நடைமுறையையே பின்பற்றியது.

தங்களுக்கு கிடைத்த அரிய வாய்ப்பை சரிவர அவர்கள் பயன்படுத்தியிருந்தால் வடக்கில் மாத்திரம் அல்ல முழு நாட்டில் உள்ள அனைத்து மக்களினதும் மனங்களையும் அவர்களால் வென்றிருக்க முடியும். ஆனால் அவர்கள் அதனை செய்யவில்லை.

இன்று புதிய அரசியலமைப்பிற்கு தெற்கின் ஆதரவை கோரும் அவர்கள் அன்று கிடைத்த வாய்ப்பை நழுவவிட்டு விட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வடக்கு ஆளுநர்...

வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

எனினும் குறித்த செய்தியை சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23-01-2019
சீட்டிழுப்பு இலக்கம் 911
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 9 4 3 9 4 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-01-23
சீட்டிழுப்பு இலக்கம் 105
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 11 37 52 80
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.01.23
சீட்டிழுப்பு இலக்கம் 2013
ஆங்கில எழுத்து C
வெல்லப்பட்ட இலக்கங்கள் 14 23 25 41
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 23/01/2019
சீட்டிழுப்பு இலக்கம் 335
வெற்றி எழுத்து L சுப்பர் இலக்கம் 23
வெற்றி இலக்கங்கள் 04 21 34 66
தேசிய லொத்தர் சபை

## அரசியலமைப்பு...

தில் ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசிய கட்சி செய்கின்ற செயற்பாடுகளின் பின்னால் வெளியில் தென்படுவதற்கு எதிரான ஒன்று இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.(ம-3)


## பதவி வெற்றிடங்கள்

தொழில் தேடுபவரா?
O/L, A/L தகைமை உடையவர்களா?
எமது முன்னணி நிறுவனத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கான பதவிகள் உள்ளன.
- வயதெல்லை 18 - 35
- தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு.

தொடர்களுக்கு: 0771237692

(7254)

## விற்பனைக்கு

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் எட்டாங்கட்டையில் பழைய சிகரெட் கொம்பனி ஒழுங்கை முடிவில் அமைந்துள்ள 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0772487041, 0778855070

(7250)

## தொழில் வாய்ப்பு

- EPT நிறுவனத்தால் உங்களுக்கு அரியதொரு வாய்ப்பு: நீங்கள் தரம் 10, O/L, A/L படித்தவராயின் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.
- முதலாம் மாதத்தின் போது - 15,000/= சம்பளமும் இரண்டாம் மாதத்தின் போது - 20,000/= சம்பளமும் மூன்றாம் மாதத்தின் போது - 30,000/= வருமானத்தினையும் தகுதிகாண் கால முடிவின் போது 45,000/= மாத வருமானத்தினையும் உங்கள் வசிப்பிடத்துக்கு அருகாமையில் நிரந்தர வேலையினையும் பெற்றுக் கொள்ள முடியும்.
- விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் உங்களுடைய முழுப்பெயர், தே.அ.அ இலக்கத்தினை இவ் 0779001474 இலக்கத்துக்கு S.M.S செய்யவும்.

மேலதிக விபரத்திற்கு: 077 905 2893


## சிங்கப்பூர் பயண...

காலை சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ளார்.

ஆசிய பசுபிக் வலய சுற்றுச்சூழல் அமைச்சர்களின் மாநாட்டில் பங்கேற்கவே அவர் சிங்கப்பூருக்கு பயணமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தில் ஜனாதிபதி உட்பட 10 பேர் பயணமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


அதிபர் சேவை
தரம் - 3
விசேட
கருத்தரங்கு

விடய ஆய்வு
P.ஆறுமுகம்
SLEAS

சனிக்கிழமை
(02.02.2019)
காலை 9.00 - 4.00 மணிவரை
கட்டணம் 300/=
இடவசதி மற்றும் அச்சடிக்கப்பட்ட குறிப்புக்களுக்காக முன்கூட்டியே பதிவை உறுதிப்படுத்தவும்.

076 688 3394,
021 222 3382

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)


## மக்களிடம் அதிகா...

சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில், தற்போது இலங்கையில் நிலவும் அரசியல் நிலைவரம் தொடர்பில் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன்; தேர்தல்களில் மக்கள் கொடுத்த ஆணையைச் சுட்டிக்காட்டிய அதேவேளை ஜனாதிபதியும் பிரதமரும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்தினார்.

மேலும், அதிகாரப்பரவலாக்கம் நேர்மையானதொன்றாகவும் மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரங்களை உபயோகிக்க கூடிய வகையில் இருத்தல் அவசியம் எனவும் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

மக்கள் கைகளில் அதிகாரங்கள் செல்லும்போது ஊழல் மற்றும் வளங்கள் வீண் விரயம் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்களை அது குறைத்து விடும். இதன் காரணமாக ஒருசில அரசியல்வாதிகள் மக்களிடம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு அஞ்சுகிறார்கள் என இரா.சம்பந்தன் மேலும் குறிப்பிட்டார்.


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


சுமார் ஒரு மணித்தியாலங்கள் நீடித்த இச்சந்திப்பின்போது இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் மற்றும் பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் பிரிவு பிரதானி போல் கிறீன் ஆகியோருடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடக்கு மக்களின்...

அதிகாரிகளுடன் வடக்கின் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பிரதம செயலாளர், சட்டத்துறையினர் ஆகியோருடன் இணைந்து மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தார்.

இதன்மூலம் உரிய அதிகாரிகளுடன் பிரச்சினைகளுடன் வரும் மக்களை பேச வைத்து அப்பிரச்சினைகளுக்கான தீர்வினை காண்பதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கைதடியில் உள்ள அவருடைய அலுவலகத்தில் வாரம் தோறும் புதன்கிழமை மக்கள் சந்திப்பினை நடத்தி வந்தார். மாகாண சபையின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் அச்சந்திப்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வடக்கு மாகாணத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநர் சுரேன் ராகவன் முதலமைச்சரின் அதே மக்கள் சந்திப்பினை புதன்கிழமையில் கைதடியில் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-3)


## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் முன்னணி சேவை நிறுவனம் ஒன்றுக்கு கிளை உதவியாளர் (ஆண்/பெண்) தேவை. தகைமை: A/L சித்தி. கிளிநொச்சி நகர எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்புகளுக்கு:
0766908963, 0770696816







# மரண அறிவித்தல்



## இராமசாமி சுப்பிரமணியம்

நீர்வேலியை பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (23.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரத்தினம் - பூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், இரஞ்சிதமலர் அவர்களின் பாசமிகு கணவரும், விமலேஸ்வரன் (விம்மி), வினேஸ்வரன் (வினோ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலினி, மதுரா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெகப்பிரியன், பிரியதர்சன், அபிராமி, சுலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்றவர்களான மருதையா, அன்னக்கிளி மற்றும் சகாதேவன், பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவயோகம், சிவகமலா, ராஜேஸ்வரி, பெருமாள் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2019) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.T.S லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(சி-5283)

தகவல் : குடும்பத்தினர்
விம்மி - 077 364 4750,
வினோ - 076 302 4294

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.